# NANJIL CATHOLIC COLLEGE OF ARTS AND SCIENCE
## KALIYAKKAVILAI

# DEPARTMENT OF TAMIL
# &
# RESEARCH CENTRE







## 2017-2022 NAAC REPORT





## NANJIL CATHOLIC COLLEGE OF ARTS AND SCIENCE
## KALIYAKKAVILAI

# DEPARTMENT OF TAMIL
# &
# RESEARCH CENTRE

## 2017-2022 NAAC REPORT

# INDEX


1. **Criteria I**

   **Curricular Aspects** **1 - 5**

2. **Criteria II**

   **Teaching – Learning – Evolution** **6 - 16**

3. **Criteria III**

   **Research, Innovations and Extension** **17 - 24**

4. **Criteria IV**

   **Infrastructure and Learning Resources** **25 - 31**

5. **Criteria V**

   **Student Support and Progression** **32 - 35**

6. **Criteria VI**

   **Governance, Leadership and Management** **36 - 42**

7. **Criteria VII**

   **Department Values and Best Practices** **43 - 50**

# CRITERIA I
# CURRICULAR ASPECTS

எங்கள் கல்லூரி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அனுமதியின் கீழ் செயல்பட்டு வருகிறது. எங்கள் கல்லூரியின் எல்லாத் துறைகளுக்கும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பாடத்திட்டத்தை வழங்குகின்றது.

ஒவ்வொரு பருவத்திற்கும் தேவையான பருவகால அட்டவணையை கல்லூரி தயாரிக்கிறது. அது பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த பயன்படுகிறது. ஒவ்வொரு பருவத்திற்கும் தேவையான கலைத்திட்டத்தினை தமிழ்த்துறை பேராசிரியர்கள் இணைந்து தயாரிக்கின்றோம்.

## திறனூட்டப்பட்ட பாடத்திட்டம்

ஒவ்வொரு பருவத்திற்கும் பாடத்திட்டம் வந்தவுடன் துறையில் கூட்டம் நடத்தி அதிலுள்ள நிறை குறைகளை விவாதித்து ஏதேனும் குறையிருப்பின் அதை பல்கலைக்கழகத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். பின்னர் மாணவர்களுக்கு பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அவர்களுடன் விவாதித்து அவர்களுடைய கருத்துக்களையும் கேட்கின்றோம்.

ஒவ்வொரு பருவத்திற்கும் தேவையான பாடத்திட்ட அட்டவணையை துறைத்தலைவர் தயாரிக்கின்றார். துறையில் எல்லா பேராசிரியர்களையும் இணைத்து கூட்டம் நடத்தி ஒவ்வொருவருக்குமான பாடங்களையும் ஒதுக்கீடு செய்கின்றார்.

பாடங்களை ஒதுக்கீடு செய்யும் போது அந்தந்த பிரிவுகளில் தேர்ந்தவர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் பாடம் நடத்த அனுமதிக்கின்றார்

## திட்டமிடுதல்

பொதுத்தமிழ் மாணவர்களுக்குத் தனியாகவும் முதுகலை மாணவர்களுக்குத் தனியாகவும் திட்டமிடுகின்றோம். பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஒவ்வொரு பாடத்திற்கும் பல்வேறு திட்டங்களை வகுத்து அதை செயல்படுத்துகின்றோம்.

முதலில் ஒரு பருவத்திற்கு ஒரு பாடத்திற்கு எத்தனை மணி நேரம் என்பதை கணக்கீடு செய்கின்றோம்.

ஒவ்வொரு அலகிற்கும் அதனை அலகின் தன்மைக்கேற்ப மணிநேரங்களை பிரிக்கின்றோம். பெரும்பாலும் ஐந்து அலகுகள் ஒவ்வொரு பாடத்திற்கும் உள்ளன.

ஒவ்வொரு அலகிற்கும் முறையே தனித்தனியாக எத்தனை தேர்வுகள் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து அதனை நடைமுறைப்படுத்துகின்றோம்.

பாடத்தை முடித்த பின் திருப்புதலுக்கும் குறிப்பிட்ட மணிநேரங்களை ஒதுக்கீடு செய்கின்றோம்.

மிகவும் மோசமான நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு remedial வகுப்புகளை பாடத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் தவிர்த்து பிற நேரங்களில் திட்டமிட்டு நடத்துகின்றோம்.

பொதுத்தமிழ் மாணவர்களுக்கு பாடத்திட்டத்தின் வழியே தாய்மொழி உணர்வை ஊட்டும் விதத்தில் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம், நடனம், நாடகம் ஆகியவற்றில் அவர்களைப் பங்கு பெறச் செய்து அவர்களை வளமைப்படுத்துகிறோம்.

பாடத்திட்டத்தை பாடவேளையில் பயன்படுத்தும் போது மாணவர்களின் கவனம் சிதறாமல் இருப்பதற்கு சின்ன சின்ன கதைகளைக் கூறி பாடத்தை அதனோடு தொடர்புபடுத்தி பாடம் நடத்துகின்றோம்.

சிக்கலான பாடங்களை பேராசிரியர் ஒவ்வொருவரும் மாறி மாறி எல்லோரிடமும் கலந்துரையாடி குறிப்பிட்ட பாடத் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அதனை மாணவர்களிடம் வகுப்பில் பேச செய்து அவர்களுடைய பேச்சாற்றலை பாடத்திட்டத்தின் மூலமே வளர்க்கச் செய்கின்றோம்.

**முனைவர் பட்ட ஆராய்ச்சி**

முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு பல்கலைக் கழக பாடத்திட்ட ஆய்வு வழிகாட்டுதலின் படி வாரந்தோறும் ஆய்வரங்கம் மற்றும் புத்தக மதிப்புரை போன்றவற்றை திட்டமிட்டு செயல்படுத்தி வருகின்றோம்.

முனைவர் பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தேர்தெடுத்துள்ள தலைப்புகளுக்கு ஏற்ப கள ஆய்வு மற்றும் நூலகப் பயன்பாடு அடிப்படையில் அவர்களை ஆற்றுப்படுத்துகின்றோம். ஆய்வுகட்டுரைகள் எழுத வைத்தல் அவற்றை முறைப்படுத்தி தகுதியான ஆய்விதழ்களில் வெளியிட வைத்தல் பல்கலைக்கழகம் வரையறுத்துள்ள அரையாண்டுக்கொரு முறை முறையான அறிக்கைகளை சமர்பிக்க வைத்தல் சரியான கால அளவில் அவர்களை ஆய்வை நிறைவு செய்ய வைத்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

**வாரம்**

வாரந்தோறும் மாணவர்களுக்கு எடுத்த பாடப்பகுதியில் இருந்து சிறிய அளவில் 10 அல்லது 15 நிமிட தேர்வை நடத்துகின்றோம்.

**15 நாள்**

இரண்டு வாரத்திற்கு ஒருமுறை அதுவரை அவர்களுக்கு எடுத்த பாடத்தைக் குறித்து முழுமையான நினைவூட்டலை வழங்குகின்றோம். அதுவரை நடத்திய பாடம் குறித்தான பின்னூட்டத்தை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு அதற்கேற்ப தொடர்ந்து பாடத்தை நடத்துகின்றோம்.

**மாதம்**

ஒவ்வொரு பருவத்திலும் மூன்று அகமதிப்பீட்டுத் தேர்வை நடத்துகின்றோம். ஒரு பருவத்திற்கு ஒரு மாதிரித் தேர்வையும் நடத்துகின்றோம்.

**நுண்ணாய்வின் பயன்**

மாணவர்களைத் திட்டமிட்டு தொடர்ந்து நுண்ணாய்வு செய்ததன் விளைவாக பொதுத் தமிழ் பிரிவில் 12 மாணவர்கள் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பிடித்தனர். முதுகலைப் பிரிவில் ஒரு மாணவி தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

அதற்கு முன்னுதாரணமாக மரம் நடுதல் நீர் மேலாண்மை போன்ற செயல்பாடுகளை நாங்களே முன்னின்று செய்து அவர்களையும் அதைச் செய்ய நெறிப்படுத்துகின்றோம்.

## Cross – Cutting Issues

தமிழ்த்துறையல்லாத பிறதுறை மாணவர்களுக்கு பொதுத்தமிழ் பாடத்திட்டம் அமைத்திருப்பதே அவர்கள் எந்நதத் துறையாக இருந்தாலும் அவர்கள் சமூக வாழ் காரணிகளாக விளங்கக் கூடிய சமூக மதிப்பீடுகள் சூழலியல் நிலைத்தன்மை, தொழில்சாற் அறம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கே.

பொதுத்தமிழ் மாணவர்களுக்கு சமூக மதிப்பீட்டுக் கல்வி, சூழலியல் கல்வி போன்றறை பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டத்தின் வழியே சமூக மதிப்பீடுகள், திறன் வளர் பண்புகள், சமூக ஒழுக்க கேடுகளை புரிய வைத்து சமூகச் சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் போன்றவற்றை அவர்களுக்கு உணரச் செய்கின்றோம்.

### சூழலியல் நிலைத்தன்மை

நம்முடைய இருப்பு நாம் சூழல் சூழலின் முக்கியத்துவம் அதன் நிலைத்தன்மை அடுத்த தலை முறையினருக்கும் ஆரோக்கியமான சூழலை உறுதி செய்தல் போன்றவற்றையும் இலக்கியப் பாடப்பகுதிகள் மூலம் மாணவர்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

### சமூக மதிப்பீடு

இளங்கலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் உரைநடை பகுதியில் 'மனித நேயம் ஒரு மார்க்கம்' 'சூழலியல் சிந்தனைகள்' 'வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவம்' 'ஒத்துப்போங்கள்' 'நேர்வழியில் செல்லும் மனப்போக்கு' போன்ற பொருண்மைகளில் இருக்கும் பாடங்கள்வழி அவர்களுக்கு சமூக மதிப்பீட்டுக் கல்வியையும் மனித மதிப்பீடுகளையும் சமூகம் சார் விழுமியங்களையும் கற்றுத் தருகிறோம்.

துறையிலுள்ள அனைத்து பேராசிரியர்களும் தங்கள் அறிவு, நுட்பம், தனித்திறமை ஆகிய பண்புகளை மாணவர் நலனுக்கு தக்க முறையில் பயன்படுத்துகின்றனர். பாடத்திட்டத்தின் வழியாக மாணவர்களுக்கும் தொழில்சார் அறத்தை கற்றுத்தருகின்றனர். ஒரு கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு இத்திறன்களை அவர்கள் செவ்வனே நிறைவேற்றுகின்றனர்.

**ஆவணப்படுத்துதல்**

துறைசார்பாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் கையேடு பராமரித்தல், புகைப்படம் எடுத்தல், முறையான ஆதாரங்களைப் பராமரிக்கின்றோம்.

உதாரணமாக ஒரு நிகழ்வு நடைபெறும் போது அந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ் அறிக்கை பின்னூட்டம் போன்றவற்றை ஆதாரங்களாக பராமரிக்கின்றோம்.

பொதுத்தமிழ், முதுகலை மாணவர்களுக்கு இந்த நடைமுறையைப் பின்பற்றுகிறோம்.

# Criteria II

# Teaching – Learning – Evolution

## Teaching plan by the department

துறையின் கற்பித்தல் திட்டம் புதிய கல்விப்பருவம் தொடங்குவதற்கு முன் துறைத்தலைவரால் திட்டமிடப்படுகிறது. துறைப்பேராசிரியர்கள் தங்கள் நிபுணத்துவத்தின் அடிப்படையில் தங்கள் பாடத்தை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள். துறைத்தலைவர் ஆண்டுத்திட்டம், பாடதிட்ட கால அளவு மற்றும் கால அட்டவணையை தயார் செய்கிறார்.

ஒவ்வொரு பேராசிரியருக்கும் ஒரு வாரத்திற்கு 18 மணி நேரம் பாடவேளையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் ஒருவருக்கு 3 மணி நேரமாக பாடவேளை பகுக்கப்பட்டுள்ளது. Elective paper –கான பாடவேளை 4 மணி நேரமாகும். Elective paper நடத்தும் ஆசிரியர்களே வாரம் 2 மணி நேரம் அறிமுகத்தமிழ் பயிற்றுவிக்கின்றார்கள். 12 மணி நேரம் பொதுத்தமிழுக்கும் 6 மணி நேரம் Elective paper –க்கும் என பாடவேளை பகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

### Teaching plans by faculties

ஒவ்வொரு Unit முடிந்ததும் Unit Test மற்றும் Revision நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பாட அலகுகளிலும் வினாவங்கி உருவாக்கி அதில் வினாடிவினா நடத்துகின்றோம்.

யாப்பு இலக்கணப் பகுதியை நடத்துகின்ற போது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு சினிமா பாடல்களைப் பாடி விளக்குகின்றோம்.

பாடபகுதியிலுள்ள நாடகத்தை மாணவர்களை வைத்தே நடிக்க வைத்து விளங்க வைக்கிறோம். ஒவ்வொரு உள்மதிப்பீட்டுத் தேர்வுக்கும் ஒரே அளவு பாடத்தை எல்லா பேராசிரியர்களும் நடத்துகின்றோம்.

சமூக அவலங்களை ஆதாரங்களோடு மாணவர்களுக்கு விளக்கி கூறி வருகின்றோம்.

## Teaching Methods

பாட ஆசிரியர்கள் பாரம்பரியம் மற்றும் நவீன கற்பித்தல் முறைகளான கரும்பலகை கற்பித்தல், ICT செயல்படுத்தப்பட்ட கற்பித்தல் மற்றும் பவர்பாயிண்ட் ஸ்லைடுகள் ஆகிய இரண்டையும் பின்பற்றுகின்றனர். துறை சார்ந்த ஆசிரியர்கள் ஆராய்ச்சி சார்ந்த கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பாடதிட்டம் தொடர்பான கருத்தரங்கு டெஸ்க்டாப் மற்றும் ப்ரொஜெக்டர் பயன்படுத்தி நடத்தப்பட்டன. வெபினார்களை நடத்த ஆசிரியர்கள் பல்வே ICT கருவிகளை பயன்படுத்துகின்றனர். பாட ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் PPT ஸ்லைடுகளைத் தயாரிக்கிறார்கள். பாடதிட்டத்திலுள்ள நாடகங்கள் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி கதாப்பாத்திரத்திற்கு எற்ற ஆடையுடன் அரங்கேற்றப்படுகிறது. இணைத்திலிருந்து பாடத்திற்கு தேவையான தரவுகளை பதிவிறக்கம் செய்து, அதை pdf வடிவில் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கோவிட் தொற்று நோய்களின் போது ஆன்லைன் வழியாக பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

## Regarding learning process

ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒவ்வொரு தலைப்புகளில் திட்டக்கட்டுரைகள் வழங்கப்படுகிறது. பாடத்திட்டத்திற்கு ஏற்ப மாணவர்கள் CD தயாரித்து வருகிறார்கள். மாணவர்கள் CD பயன்படுத்தி நடத்தப்படும் வகுப்புகளில் ஏற்படும் சந்தேகங்கள் ஆசிரியரால் தீர்த்துவைக்கப்படுகிறது. மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு இம்முறை மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. வினாடிவினாக்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களின் ஆக்கப்பூர்வமான கற்றல்திறனை மேம்படுத்தும் வகையில் விவாதங்கள் நடத்தப்படுகிறது.

## Identifying slow learners

பின்தங்கிய மாணவர்களை ஒவ்வொரு ஆசிரியர்களும் வகுப்பு நேரத்தில் கண்டறிகின்றனர். கற்றல் நிலைகளை மதிப்பிடுவதற்கு ஒருமதிப்பீட்டு செயல்முறை பயன்படுத்தப்படுகிறது. மாணவர்களை அடிக்கடி தொடர்பு கொள்வதன் மூலமும், உடனடி கருத்துகளை சேகரிப்பதன் மூலமும் பின்தங்கிய மாணவர்களை அடையாளம் காண முடியும். வகுப்பாசிரியர்கள் பின்தங்கிய மாணவர்களுக்கு கூடுதலாக வழிகாட்டுகின்றனர்.

## Methods adopted for slow learners.

பின்தங்கிய மாணவர்களுக்கு Remedial வகுப்புகள் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பேராசிரியர்களும் அவரவர் வசதிக்கு ஏற்ப ஒவ்வொரு வாரமும் ஒன்று அல்லது இரண்டு வகுப்குகள் 1.45 முதல் 2.45 வரை வகுப்புகள் நடத்துகின்றனர்.

வினாவங்கி, பல்கலைக்கழக வினாத்தாள்கள் வழங்கப்படுகிறது. சிறுசிறு வினாக்கள் வழங்கி விடைகள் எழுத பயிற்சி அளிக்கப்படுகிறது. 2017 – 18 கல்வியாண்டில் 124 மாணவர்களும், 2018 – 19 கல்வியாண்டில் 77 மாணவர்களும், 2019 – 20 கல்வியாண்டில் 137 மாணவர்களும் இதன் மூலம் பயன்பெற்று பல்கலைக்கழக தேர்வில் தேர்ச்சிபெற்றனர்.

## Advanced learners

உள்மதிப்பீட்டுத் தேர்வுகளில் அதிகமதிப்பெண் பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பிடிப்பதற்கு வழிகாட்டப்படுகிறது. Question Bank, Previous questions paper, Quiz போன்றவை இம்மாணவர்களுக்கு அதிகமாக வழங்கப்படுகிறது. 2018 – 20 –ஆம் கல்வியாண்டில் 16 மாணவர்களும், 2019 – 21 – ஆம் கல்வியாண்டில் 17 மாணவர்களும் இதன் மூலம் பயன்பெற்றனர். இவர்களில் 2018 – 20 –ஆம் கல்வியாண்டில் மூன்று மாணவர்கள் இரண்டு பருவங்களில் O grade –ம் 15 மாணவர்கள் A+ grade –ம் பெற்றனர். 2019 – 21 கல்வியாண்டில் 4 மாணவர்கள் இரண்டு பருவத்தில் O grade –ம் 10 மாணவர்கள் A+ grade –ம் பெற்றனர். ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டுதலில் 2018 - 2019 ஆம் கல்வியாண்டில் பொதுத்தமிழ் பாடப்பிரிவில் ஒரு மாணவியும், 2019 - 2020 –ஆம் கல்வியாண்டில் ஒரு மாணவியும், 2020 - 2021 —ஆம் கல்வியாண்டில் எட்டு மாணவர்களும் பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பிடித்தனர்.

## Methods of learning

மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. பின்தங்கிய மாணவர்களுக்கு மூன்று முறையான கற்றல்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

## Experimental learning

சமூக மதிப்பீடு சார்ந்த பாடங்கள் மாணவர் கருத்தரங்குகள் மூலம் தெளிவுப்படுத்தப்படுகின்றன. எனவே மாணவர்கள் பாடம் குறித்த ஆழமான விளக்கம் பெறுகின்றனர். பாடதிட்டத்தில் இடம்பெறும் கதைகள் மற்றும் நாடகங்கள் மாணவர்கள் தம் நடிப்புத் திறமையால் நடித்து காண்பிப்பதால் பாடத்திட்டம் அனைத்தும் மாணவர்களிடம் எளிதாகவும் ஆழமாகவும் சென்றடைகிறது.

செய்யுள் மற்றும் கவிதைத் தொடர்புடைய பாடங்கள் நடத்தும்போது பாடலின் பொருளை முதலில் கதை வடிவில் விளக்கியுரைத்து, அவர்களுக்கு எட்டிய அளவில் கவிதையாக எழுதச் செய்யும் போது பல கவிஞர்கள் உருவாவதைக் கண்டுகொள்ள முடிகிறது. பிறகல்லூரிகளில் நடைபெறும் கவிதை, கட்டுரை, வினாடிவினா போன்ற போட்டிகளில் பொதுத்தமிழ் பயிலும் மாணவர்கள் கலந்துகொண்டு பலமாணவர்களின் திறமையை அறிந்து புது புது கருத்துகளை தெரிந்து கொள்கின்றனர்.

## Participation learning

காப்பியங்கள், புராணங்கள் சார்ந்த பாடங்கள் பயிற்றுவிக்கும் போது கதாப்பாத்திரங்களின் பண்பு நலன்கள் குறித்து மாணவர்கள் விவாதித்து தெளிவு பெறுகின்றனர்.

முதல் 10 நிமிடம் முந்தைய நாள் வகுப்பில் பயிற்றுவித்த பாடத்திலிருந்தும், கடைசி 10 நிமிடங்கள் அன்று பயிற்றுவித்த பாடத்திலிருந்தும் சிறுசிறு வினாக்கள் கேட்டு, விடைகளைக் கூறச் செய்தவன் மூலம் மாணவர்கள் ஆழமான கல்வியறிவைப் பெறுகின்றனர்.

முதுகலை மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை 2.00 மணிமுதல் 3.00 மணிவரை புத்தகமதிப்புரை நடத்தி ஆய்வு சிந்தனையை வளர்க்கின்றனர். இதனால் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத்திறன் வளர்கிறது.

கோழிவிளை அகதிகள் முகாமில் போதை விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் அதைக்குறித்த விழிப்புணர்வு பெறுவதுடன் தங்கள் வாழ்வை நெறிபடுத்தவும், சமூகத்தை சீர்படுத்தவும் கற்றுக்கொள்கின்றனர்.

மாணவர்களின் படைப்பாற்றல்களான கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் போன்றவை “எண்ணங்களும் வண்ணங்களும்” என்னும் தலைப்பில் தமிழ் இலக்கியமன்ற விழாவின் போது கையெழுத்துப்பிரதியாக வருடந்தோறும் வெளியிடப்படுகிறது. இதுவரை இரண்டு கையெழுத்துப்பிரதிகள் வெளியிடப்பட்டன.

## Problem solving learning

மொழியை பிழையின்றி திருத்தமாக எழுதுவதற்கு இலக்கணம் இன்றியமையாததாகும். காலவழு, இடவழு, பால்வழு, ஒருமை பன்மை மயக்கம் போன்ற பிழைகளைத் தவிர்க்க இலக்கணப் பயிற்சி வழங்கப்படுகிறது.

பொதுத்தமிழ் பயிலும் மாணவர்கள் இலக்கணம் எளிமையாகக் கற்க அவர்களுக்குத் தெரிந்த திரையிசைப் பாடல்களை பாடவைத்து இலக்கணம் கற்பிக்கப்படுகிறது.

அறிமுகத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு தமிழில் உள்ள மொத்த எழுத்துகளை எழுதுவதற்கு பயிற்சி வழங்கப்படுவதோடு அதை வாசிக்கவும் பயிற்சி வழங்கப்படுகிறது. இதன்மூலம் அம்மாணவர்கள் கதைகள், கட்டுரைகள் எளிமையாக எழுதும் திறன் பெறுகின்றனர். அறிமுகத் தமிழ் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியை தெளிவாக கற்றுத் தேர்கின்றனர்.

## Mechanism to deal with internal examination

பல்கலைக் கழகத் தேர்வு நடைபெறுவதற்குமுன் மூன்று உள்மதிப்பீட்டுத் தேர்வுகள் நடத்தப்படுகிறது. உள்மதிப்பீட்டுத் தேர்வுக்கு முன் Unit test, topic test நடத்தப்படுகிறது. ஒவ்வொரு உள்மதிப்பீட்டுத் தேர்வுக்கும் குறிப்பிட்ட பாடப்பகுதி வரையறை செய்யப்படுகிறது. முதல் இரண்டு தேர்வுகள் 40 மதிப்பெண்கள் கொண்ட 2.00 மணி நேர கால அளவில் நடத்தப்படுகிறது. மூன்றாவது தேர்வு 75 மதிப்பெண்கள் கொண்ட 3.00 மணி நேர கால அளவில் நடத்தப்படுகிறது. தேர்வுமுடிந்த ஒருவாரத்திற்குள் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. மதிப்பெண் குறைந்த மாணவர்களுக்கு Retest நடத்தி கல்வித்தரம் உயர்த்தப்படுகிறது.

## External

பல்கலைக்கழகத்திலிருந்து தேர்வு கட்டணம் செலுத்தும் நாள் கல்லூரிக்கு தெரிவிக்கப்பட்டவுடன் முதல்வர் அவர்களால் துறைத்தலைவருக்கு தெரியப்படுத்தப்படுகிறது. இத்தகவல் வகுப்பு பேராசிரியர்களால் மாணவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் subject code பொதுத்தமிழ், அறிமுகத்தமிழ், Major மாணவர்களுக்கு தனித்தனியாக வழங்கப்படுகிறது.

75% வருகைப்பதிவு இல்லாத மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அபராத கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழக தேர்வு அட்டவணை வந்தவுடன் வகுபாசிரியர்கள் வகுப்புகளில் தெரிவிக்கின்றனர். தேர்வுக்கான பதிவு எண் மற்றும் தேர்வு எழுதுவதற்கான தேர்வுஅறை அறிவிப்புப்பலகையில் போடப்படுகிறது. தேர்வு நாட்களில் கல்லூரித்தேர்வு அலுவலா் அடிக்கடி வகுப்பறைக்குச் சென்று ஆய்வு மேற்கொள்வர்.

பல்கலைக்கழக தேர்வு முடிவுகள் வந்தபின் withheld, RA என வரும் மாணவர்கள் மறுமதிப்பீடு தேர்வு கட்டணம் செலுத்தி தங்களது விடைத்தாள்களை Xerox, Re-total, Revolution மூலம் மறுமதிப்பீடு செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. 15 நாட்களுக்குள் தேர்வுமுடிவுகள் வராவிட்டால் முதல்வரிடம் தெரியப்படுத்தி அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

## Course outcomes

முதுகலை M.A தமிழ் பயிலும் மாணவர்கள் இலக்கியம் மற்றும் இலக்கணம் சார்ந்த பாடங்களை பயில்வதோடு அறிவியல் தமிழ், ஊடகத்தமிழ், இணையதமிழ் போன்ற பாடப்பிரிவுகளைப் பயின்று ஆழமான கல்வி அறிவைப் பெறுகின்றனர். முதுகலைத் தமிழில் 2018 – 2019, 2020, 2021 கல்வி ஆண்டுகளில் 100% மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் வெற்றிபெற்றனர். பொதுத்தமிழ் பாடப்பிரிவிலும் 2018, 2019, 2020, 2021 கல்வி ஆண்டுகளில் 100% மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதற்கான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

## 2016 – 2018

| வ. எண் | பாடப்பிரிவுகள் | O+ | O | A+ |
|---|---|---|---|---|
| | | 90 – 99 | 80 – 89 | 70 – 79 |
| 1. | இக்கால இலக்கியம் கவிதையும் நாடகமும் | | | 4 |
| 2. | தொல்காப்பியம் - எழுத்து | | | 4 |
| 3. | புனைகதையும் உரைநடையும் | | | 2 |
| 4. | அற இலக்கியம் | | | 2 |
| 5. | நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் | | 2 | 4 |
| 6. | மொழி வரலாறு | | 6 | |
| 7. | தொல்காப்பியம் - சொல் | | 6 | |
| 8. | பக்தி இலக்கியம் | | 6 | |
| 9. | சிற்றிலக்கியம் | | 6 | |
| 10. | நாட்டார் பண்பாட்டு மரபு | | 6 | |
| 11. | காப்பிய இலக்கியம் | 1 | 5 | |
| 12. | தொல்காப்பியம் பொருள் | 1 | 5 | |
| 13. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 1 | 5 | |
| 14. | உரைமரபு | | 2 | 4 |
| 15. | மானிடவியல் அடிப்படைகள் | | 6 | |
| 16. | பண்டைய இலக்கியம் | | 2 | 4 |
| 17. | தொல்காப்பியம் பொருள் | | 2 | 3 |
| 18. | இலக்கிய திறனாய்வியல் | | | 3 |
| 19. | இலக்கிய மானிடவியல் | | | 5 |
| 20. | ஆய்வேடு | 6 | | |
| | | 9 | 58 | 37 |

## 2017 – 2019

| வ. எண் | பாடப்பிரிவுகள் | O+ | O | A+ |
|---|---|---|---|---|
| | | 90 – 99 | 80 – 89 | 70 – 79 |
| 1. | கவிதையும் நாடகமும் | 4 | 1 | |
| 2. | தொல்காப்பியம் - எழுத்து | 1 | 3 | 1 |
| 3. | புனைகதையும் உரைநடையும் | 1 | 4 | |
| 4. | அற இலக்கியம் | 1 | 4 | |
| 5. | நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் (Elective Paper) | 5 | | |
| 6. | ஊடகத்தமிழ் (Elective Paper) | 1 | 4 | |
| 7. | மொழி வரலாறு | | | |
| 8. | தொல்காப்பியம் - சொல் | | | |
| 9. | பக்தி இலக்கியம் | | | |
| 10. | சிற்றிலக்கியம் | | | |
| 11. | நாட்டார் பண்பாட்டு மரபு (Elective Paper) | | | |
| 12. | காப்பிய இலக்கியம் | | 1 | 4 |
| 13. | தொல்காப்பியம் பொருள் | | 1 | 1 |
| 14. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 1 | | 3 |
| 15. | உரைமரபு | 1 | | 2 |
| 16. | மானிடவியல் அடிப்படைகள் (Elective Paper) | 3 | | 2 |
| 17. | அறிவியல் தமிழ் (Elective Paper) | 1 | | 3 |
| 18. | பண்டைய இலக்கியம் | 1 | | 4 |
| 19. | தொல்காப்பியம் பொருள் | 1 | | 2 |
| 20. | இலக்கிய திறனாய்வியல் | 1 | | 4 |
| 21. | இலக்கிய மானிடவியல் | 1 | 4 | |
| 22. | ஆய்வேடு | 5 | | |
| | | 28 | 24 | 25 |

## 2018 – 2020

| வ. எண் | பாடப்பிரிவுகள் | O+ | O | A+ |
|---|---|---|---|---|
| | | 90 – 99 | 80 – 89 | 70 – 79 |
| 1. | இக்கால இலக்கியம் கவிதையும் நாடகமும் | | | 2 |
| 2. | தொல்காப்பியம் - எழுத்து | 1 | | 5 |
| 3. | புனைகதையும் உரைநடையும் | | | 3 |
| 4. | அற இலக்கியம் | | | 2 |
| 5. | நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் (Elective Paper) | | | 5 |
| 6. | ஊடகத்தமிழ் (Elective Paper) | | | 5 |
| 7. | மொழி வரலாறு | | | 6 |
| 8. | தொல்காப்பியம் - சொல் | | | 5 |
| 9. | பக்தி இலக்கியம் | | | 5 |
| 10. | சிற்றிலக்கியம் | | | 5 |
| 11. | நாட்டார் பண்பாட்டு மரபு (Elective Paper) | | 1 | 5 |
| 12. | இணைய தமிழ் (Elective Paper) | 4 | | 2 |
| 13. | காப்பிய இலக்கியம் | | 3 | 4 |
| 14. | தொல்காப்பியம் பொருள் | | | 7 |
| 15. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | | 6 | |
| 16. | உரைமரபு | | 6 | 1 |
| 17. | மானிடவியல் அடிப்படைகள் (Elective Paper) | | 7 | |
| 18. | அறிவியல் தமிழ் (Elective Paper) | | | |
| 19. | பண்டைய இலக்கியம் | | 2 | 5 |
| 20. | தொல்காப்பியம் பொருள் | | 4 | 2 |
| 21. | இலக்கிய திறனாய்வியல் | | 6 | 1 |
| 22. | இலக்கிய மானிடவியல் | | 1 | 6 |
| 23 | ஆய்வேடு | 7 | | |
| | | 12 | 36 | 76 |

## 2019 – 2021

| வ. எண் | பாடப்பிரிவுகள் | O+ | O | A+ |
|---|---|---|---|---|
| | | **90 – 99** | **80 – 89** | **70 – 79** |
| 1. | கவிதையும் நாடகமும் | | 1 | |
| 2. | தொல்காப்பியம் - எழுத்து | | 2 | |
| 3. | புனைகதையும் உரைநடையும் | | 1 | 1 |
| 4. | அற இலக்கியம் | | | 2 |
| 5. | நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் (Elective Paper) | | 1 | 2 |
| 6. | ஊடகத்தமிழ் (Elective Paper) | | | 2 |
| 7. | மொழி வரலாறு | | | |
| 8. | தொல்காப்பியம் - சொல் | 3 | | |
| 9. | பக்தி இலக்கியம் | 3 | | |
| 10. | சிற்றிலக்கியம் | 3 | | |
| 11. | நாட்டார் பண்பாட்டு மரபுகள் (Elective Paper) | 2 | 1 | |
| 12. | இணைய தமிழ் (Elective Paper) | 3 | | |
| 13. | காப்பிய இலக்கியம் | 3 | | |
| 14. | தொல்காப்பியம் பொருள் | | 1 | 2 |
| 15. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | | 2 | 1 |
| 16. | உரைமரபு | 2 | 1 | |
| 17. | மானிடவியல் அடிப்படைகள் (Elective Paper) | | 2 | 1 |
| 18. | அறிவியல் தமிழ் (Elective Paper) | | 2 | 1 |
| 19. | பண்டைய இலக்கியம் | 2 | 1 | |
| 20. | தொல்காப்பியம் பொருள் | 1 | 1 | 1 |
| 21. | இலக்கியத்திறனாய்வியல் | 1 | 2 | |
| 22. | இலக்கிய மானிடவியல் (Elective Paper) | 3 | | |
| 23 | ஆய்வேடு | 3 | | |
| | | 29 | 18 | 13 |

மேற்கண்ட கால அட்டவணையின்படி 2016 – 18 கல்வியாண்டில் 9 O+, 58 O, 37 A+, 2017 – 19 கல்வியாண்டில் 28 O+, 24 O, 25 A+, 2018 – 20 கல்வியாண்டில் 12 O+, 36 O, 76 A+, 2019 – 21 கல்வியாண்டில் 29 O+, 18 O, 13 A+ என ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

## Program outcomes

2016 முதல் 2021 வரையான கல்விஆண்டுகளில் தமிழ்த் துறையில் 21 மாணவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். அதில் 16 மாணவர்கள் Distinction with first class –உம், 5 மாணவர்கள் first class –உம் பெற்றுள்ளனர். ஒரு மாணவி பல்கலைக் கழக தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

## Result Analysis

ஒவ்வொரு பருவமும் தேர்வு முடிவுகள் வந்தவுடன் Result Analysis போடுவதற்கான படிவங்கள் துறைத்தலைவரிடம் வழங்கப்படும். அனைத்து பேராசிரியர்களும் தேர்வு முடிவு பகுப்பாய்வுகளை வகுப்புவாரியாக அப்படிவத்தில் நிரப்பி துறைத்தலைவரிடம் ஒப்படைப்பார்கள். பின்னர் முதல்வர், கல்லூரிச் செயலர், துறைப்பேராசிரியர்கள் இணைந்த Result Analysis கூட்டமானது நடைபெறும். இக்கூட்டத்தில் அதிக தேர்ச்சி விகிதங்களை கொடுத்த பேராசிரியர்களுக்கு பாராட்டும், ஏனைய பேராசிரியர்களுக்கு அதிக தேர்ச்சி விகிதத்தை கொடுப்பதற்கான அறிவுரையும் வழங்கப்படும்.

# Criteria III

## Research, Innovations and Extension

களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை அறிவியல் கல்லூரி 2012 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆரம்ப காலங்களில் தமிழ்த்துறையானது பொதுத்தமிழ் பயிற்றுவிக்கும் துறையாக இருந்தது.

**முதுகலைத் தமிழ்**

2016 –ஆம் ஆண்டு முதல் முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. 6 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இவ்வகுப்பில் 2018 முதல் முதுகலை மாணவர்களின் ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**தலைப்புத் தேர்வு**

முதுகலை மாணவர்கள் தாங்கள் ஆர்வத்தின் அடைப்படையிலேயே தலைப்புகளைத் தேர்வு செய்வர். சிலநேரங்களில் துறைப்பேராசிரியர்களும் மாணவர்களும் தலைப்புத் தேர்வுக்கு உதவுவதுண்டு.

**நெறியாளர் தேர்வு**

முதுகலை மாணவர்களுக்குரிய நெறியாளர் தேர்வானது குலுக்கல் முறையில் அமைக்கப்படும். அனைத்து ஆசிரியர்களின் பெயர்களையும் தனித்தனித் துண்டு காகிதத்தில் எழுதி குலுக்கி போடும் போது மாணவர்கள் ஆளுக்கு ஒரு துண்டை எடுப்பர் அவர்கள் கையில் எடுத்த காகிதத்துண்டில் எந்த ஆசிரியரின் பெயர் வருகிறதோ அவரே அந்த மாணவரின் நெறியாளராய் செயல்படுவர்.

**நெறியாளர் அணுகுமுறை**

ஆய்வுத்தலைப்பிற்கேற்ப நெறியாளரின் அணுகுமுறை மாறுபடும். இலக்கணம், சமூகம், வாழ்வியல், நாட்டுப்புறம் என்ற பல்வேறு ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**தரவு சேமிப்பு**

மாணவர்கள் தங்கள் தேர்ந்தெடுத்த தலைப்பின் தன்மையைப் பொறுத்து தரவுகள் சேமிப்பர். சேகரிக்கப்பட்டத் தரவுகள் நெறியாளரால் சரி பார்க்கப்படும். ஆய்வேடு மேலும் தரமுள்ளதாய் மாற நெறியாளர் வழிகாட்டுவார்.

**நூலகப்பயன்பாடு**

கல்லூரி நூலம் ஆய்விற்குத் தேவையான தரவுகளின் களமாக அமையும், மேலும் தரவுகள் தேவைப்பட்டால் பிற மாவட்டம் அல்லது மாநில நூலகங்கள் ஆய்வுக் களமாக அமைக்கப்பட்டு அங்கு சென்று தரவுகளைச் சேகரிப்பர்.

**ஆய்வாளர்களின் பொருண்மை**

கடந்த ஐந்து ஆண்டுகளில் 23 முதுகலை ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| எண் | ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2016 – 2018 | 6 |
| 2. | 2017 – 2019 | 5 |
| 3. | 2018 – 2020 | 7 |
| 4. | 2019 – 2021 | 3 |
| 5. | 2020 – 2022 | 2 |

**ஆய்வு முடிவுகள்**

- ❖ சங்ககாலத்திலுள்ள இறந்தோர் வழிபாட்டு எச்சம் தற்காலத்திலும் நடைமுறையில் உள்ளதை ஆய்வில் கண்டறிந்துள்ளோம்.
- ❖ சங்க காலத்திலுள்ள உணவு பழக்க வழக்கங்கள் தற்காலத்தில் முற்றிலும் மாறுபட்டுள்ளதை ஆய்வில் உறுதி செய்துள்ளனர்.

- சங்ககால இலக்கியமான புறநானூறானது அரசர்களின் வீரம், கொடை போன்றவை சங்ககாலத்தில் பேணப்பட்டதை ஆய்வு செய்து அதன் சிறப்பியல்புகளை எடுத்தியம்புகிறது.

- பிற சங்க இலக்கிய நூல்களிலிருந்து மருதத்திணை **பாடல்களில் பெண்ணியச் சிந்தனை மாறுபட்டிருப்பதை** ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

- நம் சமூகத்தில் இருக்கிற **சாதிய வேறுபாடுகளை** மாறியல் நாவல் மூலம் ஆய்வு செய்து இன்றைய சமூகத்திலும் சாதிய வேறுபாடுகள் இருப்பதை உணர்த்தி நிற்கிறது ஆய்வு.

- சங்ககாலத் தமிழர்கள் **தரைவழி, கடல்வழி வாணிபத்தில்** சிறப்பு பெற்றுவிளங்கினர். வறுமை போக்கும் ஆயுதமாக கலைகள் இருந்திருக்கின்றன. பாடல் பாடி நடனம் ஆடி பரிசில் வாழ்வு வாழ்ந்தனர் என்பதை ஆய்வு முடிவில் தெரிவித்துள்ளனர்.

- கலிங்கத்துபரணியில் இடம்பெற்றுள்ள வரலாற்று நிகழ்வுகளை வரிசைப்படுத்தி அதை ஆய்வு முடிவாகப் பதிவு செய்துள்ளனர்.

- இலக்கியத்திற்கு இலக்கணம் கூறிய இலக்கண நூலான தொல்காப்பியம் மக்கள் வாழ்விலும் சில இலக்கணங்களை வகுத்துள்ளன. களவு, வரைவு போன்றவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ளதையே இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

- சங்ககால மக்கள் **இயற்கையைப் பேணுதல், நீர் மேலாண்மை, காற்று, காடு, போன்றவற்றைப் பேணுதல்** போன்ற செய்திகளைச் சங்ககாலம் பாடல்களிலிருந்து ஆய்வு செய்து முடிவுரைத்துள்ளனர்.

- சங்க கால ஏறுதழுவுதலை வெளிப்படுத்தும் “வாடிவாசல்” என்னும் நாவலும், **பெண்ணுக்கு அநீதி விளைவிக்கும்** உன்னைப் போல் ஒருவன் நாவலும் ஒப்பீடு செய்யப்பட்டு இரண்டு காலகட்டங்களில் நடைபெறுகின்ற வறுமை ஒரேமாதிரியான விளைவைக் கொடுக்கிறது என்பதை ஆய்வு முடிவாகக் கண்டறிந்துள்ளனர்.

- ❖ ஒரு கவிஞன் கிராம வாழ்க்கையில் தொடங்கி பிழைப்புக்காக நகர வாழ்க்கையில் குடிபெயர்ந்த பின்பும் அவன் நினைவு முழுவதும் தான் வாழ்ந்த பால்ய கால நிகழ்வைச் சுமந்த கிராமத்தையேச் சுற்றி சுற்றி வருவதை அழகியல் அணுகுமுறையோடு ஆய்ந்து **கிராமத்து வாழ்வே இனிமையானது** என்று உணர்த்தியுள்ளது முதுகலை ஆய்வு.

- ❖ பாரதியார் பாடல்கள் சமூகத்தில் ஏற்படுத்திய **விடுதலை தாக்கத்தையும்** அவரது இலக்கியப் புதுமையான மரபுக்கவிதையிலிருந்து நவீனக் கவிதை முறை முன்னேற்றம் பெற்று நிற்பதை ஆய்வு உணர்த்தியுள்ளது.

'அழகின் சிரிப்பு' நூலுரைக்கும் தமிழ் உணர்வை ஆழமாக ஆய்வு செய்து அது உணர்த்தும் 'தனித்தமிழ் பேசுதல், எழுதுதல்' ஆகியவற்றை கண்டறிந்து குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்விடு தூது என்னும் சிற்றிலக்கிய நூல் தமிழின் பெருமைகளான பழமை சிறப்பு செம்மை, அருமை, நுண்மை, தொன்மை போன்றவற்றை வெளிப்படுத்துவதை முதுகலை ஆய்வு விளக்குகிறது.

எண்ணங்களும் ஏக்கங்களும் என்ற கவிதை தொகுதியில் வெளிப்படும் சமூக அவலங்களை **(குடி வெறி, மதவெறி, சாதிவெறி)** போன்றவற்றை வெளிப்படுத்தி அதன் தீர்வு முடிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**இலக்கணப் பொருண்மை முடிவுகள்**

தொல்காப்பியத்திற்கு பல்வேறு உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் இளம்பூரணர் ஒருவர். அவரது உரையே எளிமையும் சிறப்பும் உடையதாய் அமைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுடன் முடிவு கூறியுள்ளனர்.

- ❖ தேன்மழை கவிதையில் யாப்பு அணியில் ஏற்பட்டுள்ள தற்கால மாற்றங்களை இவ்வாய்வு சுட்டிநிற்கிறது. 'ஆய், மான, மாதிரி' போன்ற உருபு மாற்றங்களை கண்டறிந்து முடிவு கூறியுள்ளனர்.

- ❖ முத்தொள்ளாயிரம் என்னும் நூலில் உவமையணி அதிகமாக இடம்பெற்றுள்ளதை ஆய்வில் கண்டறிந்து வகைதொகை செய்துள்ளனர். ஒரு

பாடலுக்குள்ளேயே வெவ்வேறு அணிகள் பயின்று வந்துள்ளமையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்

**பண்பாட்டுச் பொருண்மை முடிவுகள்**

கைம்மை நோன்பு, நடுகல் வழிபாடு, பகுத்துண்ணல், தன்மான உணர்வு, நாளும் கோளும் பார்த்தல், இளமை மறுமை நம்பிக்கை என பல்வேறு விதத்தில் முதுகலை ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவுரைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வாளர்கள் அடைந்த பயன்**

மேற்குறிப்பிட்ட பல்வேறு பொருண்மைகள் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவையே. இதனால் அவ்வாய்வுகள் மேற்கொண்ட மாணவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு செயலாற்ற இவ்வாய்வுகள் துணை செய்தன. **சமூகத்தை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்** என்று கற்றுக் கொண்டனர்.

**ஆய்வேட்டின் பயன்**

சமூகச் சிக்கல்களை ஆய்வாளர்கள் புரிந்து கொள்வதுடன் **அடுத்த தலைமுறையினர் பயன்படுத்தும்** வண்ணம் ஆய்வேடு பிறருக்கு உதவுகிறது.

இலக்கண ஆய்வு மொழியின் மாற்றத்தை உணர்த்தி நிற்கிறது. உருபு மாற்றம், பிறமொழிக் கலப்பு போன்ற மாற்றங்கள் வெளிப்படையாக அவ்வாய்வேடுகளில் பிரதிபலிக்கிறது. தொடர்ந்து இலக்கண ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு இந்த ஐந்து ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகள் வழிகாட்டியாக அமையும்.

**ஆய்வேடு ஒப்படைப்பு**

ஆய்வு செய்தவரின் நோக்கமும், சமூக நோக்கமுமாக உருவாக்கப்பட்ட ஆய்வேடுகள் பல்கலைக் கழகம் குறிப்பிடும் தேதிக்கு முன்பாக ஆய்வேடாக வடிவமைக்கப்பட்டு துறையில் சமர்ப்பிக்கப்படும்.

**விரிவுபடுத்தப்பட்ட செயல்திட்டம்**

சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகளில் ஒன்று கல்லூரி நூலகத்தில் ஒப்படைக்கப்படும். இவ்வாய்வேடு பார்வை நூலாக பயன்படுத்தப்படும். இனிவரும் ஆய்வுக்கு வழிகாட்டும் ஆய்வேடாக இது இருக்கும்

**முனைவர் பட்ட ஆராய்ச்சி உயராய்வு மையம்**

தமிழ்த்துறையின் மொத்த பேராசிரியர்களின் எண்ணிக்கை 7. இதில் இருவர் 'முனைவர் பட்ட நெறியாளர் தகுதிச் சான்றிதழ்' பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு நெறியாளராய் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

2018 முதல் தமிழ்த்துறை –'ஆராய்ச்சி உயராய்வு மையமாக தரமுயர்ந்தது. தற்போது 8 ஆய்வாளர்களில் 4 பேர் பகுதி நேர ஆய்வாளர்களாகவும், 4 பேர் முழு நேர ஆய்வாளர்களாகவும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

**முனைவர் பட்ட தலைப்புத் தேர்வு**

ஆய்வாளர்கள் தங்கள் ஆர்வத்திற்கு தகுந்த முறையில் ஆய்வுத் தலைப்பைத் தெரிந்தெடுப்பர் நெறியாளரோடு கலந்தாலோசித்து தலைப்பைத் தேர்வு செய்வதும் உண்டு. பின்னர் பல்கலைக்கழக முனைவர் கூடுகையில் ஆய்வுத் தலைப்பு உறுதி செய்யப்படும்.

**நுழைவுத் தேர்வு**

பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்ற பின் தங்கள் பணியைத் தொடர்ந்து செய்வர்.

**தரவு சேகரிப்பு**

தரவுகளைச் சேகரிக்க ஆய்வாளர்கள் கல்லூரியின் இணைய நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல் மற்றும் மொழி சார்ந்த கருத்தரங்குகளில் இணைந்து ஆய்வுக்குத் தேவையானத் தகவல்களைத் திரட்டிக் கொள்கிறார்கள். எம் துறையில் நடந்த 'வினை இலக்கண மரபு, தமிழ்ப் படைப்பிலக்கிய புனைவு வெளிகள், இயேசு காவியக் கருத்தரங்கம்,

நாட்டார் வழக்காற்றியலும், காப்பியங்களும் போன்ற பல்வேறுபட்ட கருத்தரங்குகளிலும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தரவுகளை சேகரித்தனர்.

தங்களுக்குத் தேவையான நாட்டுப்புறக் கூறுகள், நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் அனைத்தையும் தரவாகச் சேகரித்துக் கொண்டனர்.

**வருகை பதிவு**

முழுநேர ஆய்வாளர்கள் தினமும் கல்லூரிக்கு வருகை தந்து தங்கள் நெறியாளரின் பொறுப்பில் உள்ள வருகைப்பதிவேட்டில் வருகையைப் பதிவு செய்து கொள்வர்.

**ஆய்வாளர் அறை**

வருகை தந்த ஆய்வாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆய்வாளர் அறையில் அமர்ந்து தங்கள் பணி செய்வர். அவ்வறையில் இணைய இணைப்புடனான கணினி வசதி உண்டு.

**ஆய்வுப் பொருண்மை**

- **சமுதாய விழிப்புணர்வை** உருவாக்கும் சக்தி நிறைந்த ஆயுதம் பாடல்களே. ஆகவே திரையிசைப் பாடல்களில் கவிஞர் வாலியின் பாடல்களில் சமுதாயப் பார்வை என்னும் தலைப்பில் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- கோடி குருஸ் கொற்கை நாவலில் **சமூக விழுமியங்கள்** என்னும் தலைப்பில் மீனவ மக்களின் வாழ்வு பற்றிய ஆய்வும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- **கலாச்சாரத்தை பாதிக்கும் சூழலைக்** கண்டறிந்து அதில் மாற்றம் உருவாக்க வேண்டி ஆர்வமாகத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து பழந்தமிழ் இலக்கியங்களில் ஆடை அணிகலன்கள் என்னும் தலைப்பிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- **பழமை மரபைக் காக்க வேண்டும்** இனிவரும் தலைமுறையினர்க்கு நம் மரபை பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் ‘சங்க இலக்கியத்தில் மன்றங்களும் காவல் மரங்களும் என்னும் தலைப்பில் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**ஆய்வின் பயன்**

முனைவர் பட்ட ஆய்வுகள் அனைத்தும் ஆய்வாளர்களின் சிந்தனைத் திறனையும், சமூகத்துடனான தொடர்பின் எல்லையை விரிவுபடுத்துவதாகவும் மாறி வருகிறது.

இவ்வாய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டபின் நூலகத்தில் பாதுகாக்கப்படும். இத்தலைப்பு சார்ந்த ஆய்வுகள் எதிர்காலத்தில் வரும் தலைமுறையினர்க்கு வழிகாட்டியாக துணைமை ஆதாரமாக அமையும். ஆய்வுக் கட்டுரை எழுத நினைப்பவர்க்கும், பண்டைய காலம் பற்றி அறிய நினைப்பவர்களுக்கும் அவர்கள் தேடும் தரவுகளை முழுமையாக முன்னுரைக்கும் ஆய்வேடாக இது அமையும்.

'புறநானூற்றில் நீத்தார் சடங்குகள்' என்ற ஆய்வேட்டில் நினைவுப் பொருள்களை வைத்து அடக்கம் செய்தல், நடுகல் நடுதல், நடுகல் வழிபாடு போன்ற செய்திகள் நமக்குக் காணக்கிடைக்கின்றது.

முப்பாட்டன் கண்ணாடி, ஊசிகள் ஆகிய கவிதை தொகுதிகளில் சொல்லிலக்கண ஆய்வு மேற்கொண்டதில் பழைய இலக்கண மரபை மீறிய தொடரமைப்பு கவிதைகளில் காணப்படுவதை கண்டறிந்துள்ளனர். அது போல இலக்கண நூலார் வகுத்துள்ள 'எச்ச வடிவங்கள்' தற்காலத்தில் 'அடை'களாக பயன்படுகின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

உரையாசிரியர்கள் குறித்த ஆய்வில் எல்லா இலக்கண உரையாசிரியர்களைவிட இளம்பூரணரே சிறந்த இலக்கண ஆசிரியர் என்று ஆய்வு முடிவு நிறுவுகின்றது.

நற்றிணையில் உணவு பொருட்கள் என்ற ஆய்வானது அக்கால மக்கள் உண்ட உணவு வகைகள், பயன்படுத்திய பாத்திர பண்டங்கள், உணவுப்பொருட்கள் குறித்த கலைச் சொற்கள் போன்றவற்றை வகைப்படுத்திக் கூறுகின்றது.

# Criteria IV

# Infrastructure and learning Resources

**உள்கட்டமைப்பும் மாணவர்களின் பயன்பாடும்**

மாணவர்களுக்கு பயன்படும் வகையில் காற்றோட்டமான வகுப்பறை, அனைத்து வகுப்புகளிலும் ஒளிப்படக்காட்டி கருவி, கரும்பலகை, வசதியான இருக்கை, அனைத்து வகுப்பு மற்றும் துறைகளில் இணைய வசதி, நூலகம், இணைய நூலகம், துறை நூலகம், கணினி வசதி கருத்தரங்ககளை நடத்த கருத்தரங்க அறை, மாணவர்கள் கலையாற்றலை வெளிப்படுத்த கலையரங்கம், சுத்தமான குடிநீர், தீ விபத்து நேராமல் இருக்க தீயணைக்கும் கருவி, மாணவ மாணவியர்களுக்கு தனித்தனியாக ஓய்வு அறை, உணவகம், மருந்தகம், அகலமான விளையாட்டு மைதானம், பிரார்த்தனை அறை, மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு பயிற்சியளிக்க உடற்கல்வி இயக்குநர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் அமைத்து தரப்பட்டுள்ளன.

**வகுப்பறை நிர்வாகம்**

பொதுத்தமிழ், முதுகலைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கு தனி வகுப்பறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. காற்றோட்டமும் வெளிச்சமும் மிகுந்த அகன்ற வகுப்பறையில் மின்விசிறி, கரும்பலகை மற்றும் ஒளிப்படக்காட்டி முதலியவை காணப்படுகின்றன. மாணவர்களுக்கான இருக்கைகள் அமர்வதற்கு ஏற்ற வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 64 மாணவர்கள் அமரும் வகையில் அகலமானதாக வகுப்பறைகள் அமைந்துள்ளது.

**கற்றல் - கற்பித்தல் முறைகள் :**

வகுப்பறையில் கற்பிக்கும் பாடங்களை கரும்பலகையில் எழுதியும், எளிமையாக எடுத்துரைத்தும் கற்பிக்கப்படுகிறது. வகுப்பில் எடுக்கும் பாடங்கள் மாணவர்களை படிக்க வைப்பதோடு, அவர்களை அந்த வகுப்பிலேயே எழுத வைப்போம். உடனே படித்து எழுதாத மாணவர்களை அடுத்த வகுப்பில் எழுதுமாறு அறிவுறுத்துவதோடு எழுத வைத்தும் வாங்குவோம். வகுப்பறைகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் சந்தேகங்களை கரும்பலகையில் எழுதி காட்டியும், ஒளிப்படக்காட்டியில் விளக்கப்படக்காட்சிகள் மூலமாகவும் விளக்கி உரைக்கப்படுகிறது. இதன்மூலம்

மாணவர்கள் காதால் கேட்டும் கண்ணால் பார்த்தும் தாங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்தி கொள்கிறார்கள்.

மாணவர்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் கவிதை, சிறுகதை, நாவல் கட்டுரை போன்ற செயல்பாடுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் படைப்பாற்றல் திறன் கொண்ட மாணவர்கள் தங்கள் படைப்பாற்றலை வளர்த்து கொள்கிறார்கள்.

**கணினி பயன்பாடு**

முதுகலைத்தமிழ் மாணவர்களுக்கு நூலகத்தில் இருக்கும் இணைய – நூலகம் மற்றும் ககணினிகளை பயன்படுத்தும் வகையில் தனியாக கணினி மற்றும் ஆய்வேடு பயன்பாட்டு நேரம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு படிக்கும் மாணவர்கள் தாங்கள் எழுதும் ஆய்வு கட்டுரை தொடர்பான சந்தேகங்களை தெளிவுபடுத்தி கொள்ள நூலகத்தில் இருக்கும் கணினிகளை பயன்படுத்துகிறார்கள். பொதுத்தமிழ் பயிலும் மாணவர்கள் வகுப்பு நேரம் முடிந்த பின்பு, நூலக இணைய-கணினிகளை பயன்படுத்துகிறார்கள்.

தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் தங்கள் ஆய்வு தொடர்பான தரவுகளை, இணைய நூலக கணினிகளை பயன்படுத்தி பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நூலக கணினிகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்த்துறையில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளதோடு, இணைய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர்கள் பாடம் தொடர்பான தகவல்களை பெறவும், கல்லூரி தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும் உதவியாக அமைந்துள்ளது.

**உட்புற – வெளிப்புற விளையாட்டுகள் :**

எமது கல்லூரியில் செஸ், மேசை பந்து, கேரம் போர்டு போன்ற உட்புற விளையாட்டுகளும் கிரிக்கெட், கபடி, கோ-கோ, கால்பந்து, கூடைப்பந்து, பேட்மின்டன், குண்டு எறிதல், ஓட்ட பந்தயம் போன்ற வெளிப்புற விளையாட்டுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 2020 – 2021 –ஆம் கல்வியாண்டில் பயின்ற முதுகலைத்தமிழ் முதலாமாண்டு மாணவன் S. Ajimon கல்லூரி அளவில் நடைபெற்ற தடகள போட்டிகளில் வென்று தலைசிறந்த முதன்மை மாணவனுக்கான பரிசை பெற்றான்.

பொதுத்தமிழ் மாணவர்கள் அதிகமாக இருப்பதால் அவர்கள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் நடைபெறும் உட்புற வெளிப்புற விளையாட்டுகளில் கலந்து கொண்டு பரிசு பெறுகிறார்கள். முதுகலைத்தமிழ் பயிலும் மாணவர்களும் ஆர்வமுடன் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்.

கல்லூரி வகுப்பு நேரம் முடிந்தபின் விளையாட்டுகளில் ஆர்வம் உடைய ஆசிரியர்கள் மைதானத்திற்கு சென்று தாங்களுக்கு விருப்பமான விளையாட்டுகளில் பயிற்சி எடுப்பதுடன் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று பரிசு பெறுகிறார்கள்.

**யோகா :**

எமது கல்லூரியில் நடத்தப்படும் யோகா வகுப்புகளில் பொதுத்தமிழ் பயிலும் மாணவர்கள் செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் கலந்து கொண்டு பயனடைந்து வருகிறார்கள். யோகா வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**ஆய்வு நூற்கள்**

தமிழ்த்துறை நூலகத்தில் ஆய்வு மாணவர்களுக்கு பயன்படும் வகையில் 275 புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| காப்பியங்கள் | - | 10 |
| புராண இலக்கியங்கள் | - | 14 |
| சமய இலக்கியங்கள் | - | 10 |
| வரலாற்று நூல்கள் | - | 37 |
| கவிதை நூல்கள் | - | 9 |
| அகராதி நூல்கள் | - | 3 |
| சங்க இலக்கியம் | - | 3 |
| சிற்றிலக்கியம் | - | 2 |
| நாவல் | - | 2 |

| | | |
|---|---|---|
| நீதி நூல்கள் | - | 21 |
| இலக்கண நூல்கள் | - | 14 |
| பெண்ணியம் | - | 6 |
| சிறுகதை | - | 14 |
| தலித்தியம் | - | 6 |
| நாட்டார் வழக்காற்றியல் | - | 20 |
| கல்வெட்டியல் | - | 1 |
| தகவல் தொடர்பு | - | 2 |
| கலை இலக்கியம் | - | 4 |
| ஆய்வு நூல்கள் | - | 90 |
| நாடக நூல்கள் | - | 2 |

என்ற பிரிவுகளில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களை ஆய்வு மாணவர்கள் தேவைக்கேற்ப எடுத்து பயன்படுத்தி வருகின்றனர்.

**பொதுநூற்கள்**

மேலும் தமிழ்த்துறை நூலகத்தில் பொதுத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கென 431 புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கட்டுரை நூல்கள் | - | 22 |
| நாவல் | - | 15 |
| ஆய்வு நூல்கள் | - | 34 |
| வாழ்க்கை வரலாறு | - | 20 |
| பொது அறிவு | - | 195 |
| இலக்கண நூல்கள் | - | 35 |

| | | |
|---|---|---|
| ஆங்கில நூல்கள் | - | 8 |
| சிறுகதை | - | 18 |
| நாடகம் | - | 20 |
| நீதி நூல்கள் | - | 14 |
| கவிதை நூல்கள் | - | 10 |

என்ற பிரிவுகளில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களை பொதுத்தமிழ் பயிலும் மாணவர்கள் தேவைக்கேற்ப எடுத்து பயன்படுத்தி வருகின்றனர்.

**பயன்கள்**

ஆய்வு மாணவர்கள் ஆய்வு நூல்களை படிப்பதின் மூலம் ஆய்வு தொடர்பான ஆழமான புரிதலை பெற்றுக் கொள்கிறார்கள். இலக்கண நூல்களை படிப்பதின் மூலம் இலக்கணம் தொடர்பான சந்தேகங்களில் தெளிவு பெறுகிறார்கள். சிறுகதை, நாவல், புதுக்கவிதை போன்ற படைப்பிலக்கிய புத்தகங்களை வாசிப்பதால் மாணவர்கள் தாமாகவே இலக்கியம் படைக்க ஊக்கம் பெறுகிறார்கள். புத்தக வாசிப்பின் மூலம் பேச்சாற்றல், எழுத்தாற்றல், நடிப்பாற்றல், சிந்தனையாற்றல் போன்ற பல்வேறு ஆற்றல்கள் மேம்படுகிறது. மாணவர்கள் வாழ்வில் உயர் பண்புகளை பெற்று முன்னேற நூல் வாசிப்பு அடித்தளமாக அமைந்துள்ளது.

**துறை நூலக நடைமுறைகள் :**

ஒரு மாணவருக்கு இரண்டு புத்தகங்கள் எடுத்து செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. எடுத்துச் சென்ற இரண்டு நூல்களையும் 15 நாட்களில் மாணவர்கள் துறையில் திரும்ப ஒப்படைத்தல் வேண்டும். புத்தகம் எடுக்கும் மாணவர்கள் துறை நூலக கையேட்டில், புத்தகத்தின் பெயர், ஆசிரியர் பெயர், புத்தகம் எடுக்கும் நாள் அனைத்தையும் பதிவு செய்து கையொப்பம் இட்டு புத்தகத்தை பெற்றுச் செல்வார்கள். அவ்வாறே திருப்பி செலுத்தும் போதும் துறை நூலக கையேட்டில் திருப்பி செலுத்தும் நாளைக் குறிப்பிட்டு கையொப்பம் இடுவர். மேலும் நூல்கள் தேவைப்படுவோர் இதே போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி நூல்களை பெற்றுச் செல்வர்.

தமிழ்த்துறை நூலகத்தில் மாணவர்களுக்கு மட்டுமின்றி தமிழ்த்துறை சார்ந்த ஆசிரியர்களும் நூல்களை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள்

புத்தகம் எடுக்கும் போது துறை நூலக கையேட்டில், புத்தகத்தின் பெயர், ஆசிரியர் பெயர் புத்தகம் எடுக்கும் நாள் அனைத்தையும் பதிவு செய்து கையொப்பம் இட்டு, புத்தகத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். புத்தகத்தை திருப்பி செலுத்தும் போது துறை நூலக கையேட்டில் திருப்பி செலுத்தும் நாளைக் குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.

**இணைய இணைப்பு வசதி**

தமிழ்த்துறையில் முழு நேர இணைய இணைப்பு அமைத்து தரப்பட்டுள்ளமையால் இணையவழி வகுப்பு நடைபெற்ற கால்த்தில் இவ்விணைப்பின் வழியாக மாணவர்களுக்கு தடையில்லாமல் வகுப்பு நடத்தவும், தேர்வு வினாத்தாள்கள் மற்றும் பாடக்குறிப்புகள் அனுப்பும் பணியும் மிக எளிமையாக அமைந்தது. மேலும் இணையவழி கருத்தரங்குகள் தடையின்றி நடத்தவும் இணைய இணைப்பு பேருதவியாக இருந்தது. தொடர்ந்து இப்போதும் அனைத்து பாடங்களுக்கும் தேவையானத் தரவுகளைக் கண்டறியவும் அதனைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தவும் இவ்விணைப்பு பேருதவி புரிகிறது.

இணைய வழி இணைப்பின் மூலமாக பாடம் சம்மந்தமான குறிப்புகள் தரவிறக்கம் செய்யப்பட்டு மாணவர்களுக்கான புலனம் வழியாக அனுப்பி வைக்கப்படுகிறது. இது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்தரக்கூடியதாக உள்ளது. இவ்வகையில் நமது கல்லூரியில் அமைத்து தரப்பட்டுள்ள முழு நேர இணைய இணைப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேலும் இணைய இணைப்பின் வழி நூலக கணினி வாயிலாக மாணவர்கள பாடம் தொடர்பான குறிப்புகளை சேகரிக்கிறார்கள். ஆய்வு மாணவர்களும் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

**நூலக நடைமுறைகள்**

நூலகத்திலுள்ள புத்தகங்களைப் பயன்படுத்த விரும்பும் எம் மாணவர்கள் முதலாவதாக நூலக நுழைவுப் பதிவேட்டில் தங்கள் பெயர் மற்றும் நுழைவு நேரத்தைப் பதிவு செய்து கையொப்பமிடுவர். பின் மொத்த நூல்களின் பெயர்களும் அடங்கிய நூற்பட்டியலைப் பார்த்து அந்த நூலிற்கான எண்ணைக் குறிப்பிட்டு நூலகரிடம் ஒப்படைப்பர். நூலகர் அந்த நூலை எடுத்து, நூல் எடுப்பதற்கான பதிவேட்டில் மாணவரின் பெயர், நூல் பெற்றுக் கொள்ளும் நாள், நூலின் பெயர்,

நூலாசிரியரின் பெயர், நூலின் எண் ஆகியவற்றைப் பதிவு செய்து கையொப்பம் பெற்றுக் கொள்வார். மாணவர்கள் ஒரே நேரத்தில் 3 புத்தகங்கள் எடுப்பதற்கான 'நூலக அடையாள அட்டை' மாணவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தாங்கள் எடுக்கும் நூலின் எண்ணிக்கைக் கேற்ப இந்த நூலக அட்டை நூலகரால் பெறப்படும். பின்னர் மாணவர்களின் கல்லூரி அடையாள அட்டையின் ரகசிய குறியீடும் கணினி வழியாகப் பதிவு செய்யப்படும். அதன்பின் மாணவர்கள் நூலக அனுமதிப்பதிவேட்டில், அவர்கள் நூலகத்திலிருந்து வெளியேறும் நேரத்தைப் பதிவு செய்து கையொப்பமிட்டுத் திரும்புவர் ஆசிரியர்களுக்கும் நூலகத்திலிருந்து ஒரே நேரத்தில் 4 புத்தகங்கள் எடுப்பதற்கான 'நூலக அடையாள அட்டை' தரப்பட்டுள்ளது.

**கணினி பயன்பாட்டு நடைமுறைகள் :**

கணினி இணைய நூலகம் வழியாக தரவு சேகரிக்க விரும்பும் மாணவர்கள், நூலக அனுமதி பதிவேட்டில் பெயர், நாள், நேரம் எவ்வகையான பயன்பாடு என்பதைக் குறிப்பிட்டு கையொப்பம் இடுவர். இணையத்தைப் பயன்படுத்திய பின்னர் நூலகத்தலிருந்து திரும்பும் நேரத்தைப் பதிவு செய்து கையொப்பம் இடுவர். கணினி இணைய நூலக பயன்பாட்டின் போது மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நூலகர் அல்லது நூலக கண்காணிப்பாளரின் மூலமாக தெளிவுபடுத்தி கொள்கிறார்கள்.

**வகுப்பறை பராமரிப்பு**

ஒவ்வொரு வகுப்பறையும் தினந்தோறும் கல்லூரியின் துரப்புரவு பணியாளர்கள் மூலம் தூய்மை படுத்தப்படுகிறது. வகுப்பறைகளில் குப்பைகளை சேகரிக்க குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டுள்ளது. குப்பைக் கூடைகளில் சேகரிக்கப்படும் கழிவுகள் தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வகுப்பறைகள் தூய்மையாக பராமரிக்கப்படுகிறது.

**விளையாட்டு மைதானம்**

எமது கல்லூரியில் பரந்த விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடனும் காணப்படுகிறது. விளையாட்டுப் பயிற்சிபெறும் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தி சிறப்பாக பயிற்சி பெற்று வருகின்றனர். விளையாட்டு மைதானம் முறையாக பராமரிக்கப்பட்டுவருகிறது.

# CRITERIA V

## STUDENT SUPPORT AND PROGRESSION

மாணவ, மாணவியர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை தொடர வழிகாட்டுதல், ஆளுமைத்திறன், சிந்தனைத்திறன் முதலியனவற்றை வளர்த்தெடுக்க பல்வேறு நிகழ்வுகளிலும் போட்டிகளிலும் பங்கேற்று செயல்பட ஊக்கப்படுத்துதல் கல்வி சார்ந்த புதிய தொழில்நுட்பங்களையும் அறிவு சார் செய்திகளையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உளநல ஆலோசனைகள் வழங்கி கல்வியினைத் தொடர வழிகாட்டுதல் என பல விதங்களில் மாணவ மாணவியர்களுக்கான ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கல்விசார் செயல்பாடுகள்

### Academic Support

கல்வித்துறையில் மாணவர்கள் சிறந்து விளங்குவதற்காக மாணவர்களைத் தயார்படுத்துதல், மாணவர்களின் பலம் மற்றும் பலவீனங்களைக் கண்டறிவதன் மூலம் அவர்களது குறிக்கோளை அடைய ஊக்கப்படுத்துதல் முதலானவற்றிற்கு இது உதவுகிறது. மாணவர்கள் துறை நூலகம், கல்லூரி நூலகம் முதலியவற்றையும் பயன்படுத்துதல், மின் நூல்களைக் கண்டறிந்து பாடக்குறிப்புகளைத் தயார் செய்தல்; திட்டக்கட்டுரை தகவல்களைச் சேகரித்தல் முதலான பணிகளை திறம்பட செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் மூலம் மாணவர்களின் கல்வி ஆற்றல் மேம்பட வழிவகை செய்யப்படுகிறது.

பொதுத்தமிழ் மற்றும் முதுகலை மாணவ மாணவியர்கள் கற்றலோடு நின்றுவிடாமல் உயர்கல்வி, பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்புகள் முதலியனவற்றிற்கு செல்வதற்கும் ஊக்கப்படுத்துகின்றோம்.

### Extra Curricular Activities

29.01.2020 அன்று கோழிவிளை அகதிகள் முகாமில் வைத்து போதை விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இத்தகைய நிகழ்வுகளில் பேராசிரியர்களுடன் மாணவ, மாணவியர்களுடன் கலந்து கொண்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, கலைநிகழ்ச்சிகள் நடத்துதல், கிராம மக்களிடம் உரையாடல் முதலான செயல்களில்

ஈடுபடுதல், விளையாட்டு நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வெற்றிபெறுதல் எனத் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## Students Representation

பொதுத்தமிழ் மற்றும் முதுகலைத்தமிழ் மாணவியர்கள் வகுப்பு பிரதிநித்துவனம், வகுப்பறை செயல்பாடுகள், துறைசார் நிகழ்வுகளில் பொறுப்பேற்று செயல்படுதல் கல்லூரி விழாக்களில் பங்கு பெறுதல் எனப் பல நிகழ்வுகளிலும் சிறப்புடன் செயல்படுகின்றனர்.

வகுப்பு பிரதிநிதிகள் Assignment, Class Test note முதலியவற்றைச் சேகரித்து ஒப்படைத்தல், பாடப்புத்தகங்களை மாணவ, மாணவியர்களுக்கு வழங்குதல், கல்லூரிக்கு வருகை தராத வகுப்பு மாணாக்கர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தகவல்களைத் தெரிவித்தல் (Class Test, Notes) முதலான பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல்.

வகுப்பு சார்ந்த செயல்பாடுகளில் பாடத்திட்டம் சார்ந்த கருத்தரங்கம் நடத்துதல், Assignment தயாரித்தல், புத்தக மதிப்புரை வழங்குதல், ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தல் முதலானவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கருத்தரங்கங்கள், பட்டிமன்றம், இலக்கிய மன்றவிழா, தலைவர்களின் பிறந்தநாள் விழாக்கள், பயிலரங்கங்கள் முதலான துறைசார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்று வழங்கப்பட்ட பணிகளை மாணவ, மாணவியர்கள் பொறுப்புடன் செயலாற்றி வருகின்றனர். Stage Decoration, Hall Arrangement, வரவேற்புரை, நன்றியுரை, தலைமை உரை, நிகழ்ச்சித் தொகுப்பாளர், வருகை பதிவேடு தயாரித்தல் என மாணவ, மாணவியர்கள் தங்கள் பணிகளைச் சிறப்புடன் செய்கின்றனர்.

விழாக்களில் நடைபெறும் கலை நிழ்ச்சிகள் (நாடகம், நடனம், பாடல், உரை) எனத் தங்களது பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். துறை சார்பாக கல்லூரியில் நடத்தப்படுகின்ற பாடல், பேச்சு, கட்டுரை, கவிதை முதலான போட்டிகளிலும், அரசு, கலை, இலக்கிய அமைப்புகள் நடத்தும் போட்டிகளிலும் பங்கேற்று பரிசுகளைப் பெற்று வருகின்றனர்.

## Student Progression

பொதுத்தமிழ் மற்றும் முதுகலை மாணவியர் பட்டப்படிப்பு மட்டுமின்றி பிறதுறை சாரா நல்ல தேர்வுகள் எழுதவும், உயர்கல்விக்கும் வழிகாட்டுதல் முதுகலைத்தமிழ் மாணவியர்களுக்கு ஆசிரியர் பணிசார்ந்த வேலை வாய்ப்புகளுக்கும், உயர்கல்விக்கும் ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டி வருகின்றோம். NET, SET, TRB, TNPSC முதலான போட்டித் தேர்வுக்கான வினாவங்கியினை துறைப்பேராசிரியர்கள் இணைந்து உருவாக்கி அவர்கள் தேர்வில் வெற்றி பெற உறுதுணை புரிகின்றோம். இதன் மூலம் எமது துறை மாணவியர்கள் ஊக்கம் பெற்று தனியார் பள்ளிக்கூட ஆசிரியராகவும், கல்வியல் பட்டப்படிப்பு (B.Ed), முன் முனைவர் பட்டபடிப்பு (M.Phil), முனைவர் பட்டபடிப்பு முதலானவற்றில் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர். மாணவியர்கள் பணியிலும், கல்வியிலும் தங்களை ஈடுபடுத்தி கல்வித்தரத்தில் சிறந்து விளங்குவது இத்துறைக்குப் பெருமை.

2017-2018 - B.Ed - 1 Student

2019-2020 - B.Ed -1 Student

2019-2020 - Ph.D - 1 Student

2020-2021 - B.Ed - 4 Students

2021-2022 - Ph.D - 1 Student

2021-2022 (Private Job) – School Teacher – 1 Student

Next Exam Pass - 1 Student

### முன்னாள் மாணவர் பேரவை (Alumini)

தமிழ்த்துறையானது முனன்னாள் மாணவர்களுக்கும் தற்போது பயிலும் மாணவர்களுக்கும் இடையே வலுவான உறவை ஏற்படுத்துவதற்கு முன்னாள் மாணவர் பேரவை என்னும் அமைப்பினை கொண்டுள்ளது, முன்னாள் மாணவியர்கள் தற்போது பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் புத்தகங்களை துறைக்குத் தந்து உதவி வருகின்றனர். அப்புத்தகங்கள் புத்தக வங்கி என்னும்

பெயரில் துறையில் பராமரிக்கப்பட்டு, பொதுத்தமிழ் மற்றும் முதுகலைத் தமிழ் மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2017-2018 - 11 புத்தகங்கள்

2018-2019 - 5 புத்தகங்கள்

2020-2021 - 3 புத்தகங்கள்

2021-2022 - 15 புத்தகங்கள்

எம் துறையில் மாணவியர்களே பயின்று வருவதாலும், குறைந்த எண்ணிக்கையில் மாணவியர்கள் இருப்பதாலும் ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் மாணவர் பேரவை கூட்டம் நடத்த இயலவில்லை. தற்போது 23.04.2022 அன்று முன்னாள் மாணவர் பேரவையின் முதல் கூட்டமானது நடைபெற்றது. இதில் 14 மாணவிகள் கலந்து கொண்டனர்.

# Criteria VI

# Governance, Leadership and Management

## Vision and Mission

## Vision (பார்வை)

எம்முடைய தமிழ்த்துறையானது ஆராய்ச்சி துறையாக மேம்படுத்தப்பட்டத் துறையாகும். ஆதலால் கற்றல் சார்ந்த நிகழ்வுகளில் எங்களுடைய முழுத்திறனையும் வெளிப்படுத்தி அதையே மாணவர்களுக்கு கொடுத்து அதை அவர்கள் பிறருக்கு கொடுக்க உதவிச் செய்கிறோம். ஆய்வு சார்ந்த தளங்களில் தொடர்ந்து ஆய்வு அரங்குகள் நடத்தியும், ஆய்வு கட்டுரைகள் வெளியிட்டும் வருகின்றோம். தரமான தாய்மொழிக் கல்வியை மாணவர்களுக்கு கொடுக்க உதவிச் செய்கிறோம்.

### Mission (பணி)

மாணவர்களுக்கு தரமான கல்வியை கொடுக்க உறுதிச் செய்கின்றோம். மாணவர்கள் பணி வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கவும், உயர் கல்வியை தொடரவும் ஊக்கப்படுத்தி வருகின்றோம். முதுகலை மாணவர்களுடைய பாடத்திட்டத்தை ஆய்வு களமாகத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய ஆய்வு மனப்பாண்மையை தூண்டி, முதுகலை வகுப்பிலேயே சிறந்த ஆராய்ச்சியாளர் உருவாவதை உறுதி செய்கின்றோம். வளர்ந்து வரும் ஆராய்ச்சியாளர்களை சிறந்த ஆசிரியர்கள், துறை வல்லுநர்களாக (சங்க இலக்கியம், நாட்டுப்புறவியல்) மாற்றுவதற்கான ஆர்வத்தை தூண்டக் கூடிய வகையில் ஆராய்ச்சி தலைப்புகள் தேர்ந்தெடுத்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட செய்கின்றோம்.

பார்வை மற்றும் பணியை அடைய தமிழ்த்துறை துணை புரிகிறது. துறைத் தலைவரால் இத்துறையானது செயல்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. அவர் எங்கள் துறையின் பார்வை மற்றும் பணிக்கான நடவடிக்கைகளை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைந்து செயல்படுகிறார்.

## The effective leadership

### நிர்வாக செயல்பாடு

### கருத்தரங்கம்

தமிழ்த்துறை ஆய்வு சார்ந்த தளங்களில் தொடர்ந்து ஆய்வு அரங்குகள் நடத்தி கட்டுரைகள் வெளியிடவும் துறைத்தலைவரால் அறிவுறுத்தப்பட்டு செயல்படுத்தி வருகின்றோம். கருத்தரங்கம் நடத்துவதற்கு முதலில் துறையின் துறைத்தலைவர் துறையாசிரியருடன் கலந்துரையாடி தலைப்பைத் தேர்வு செய்து தேதியை முடிவு செய்து கல்லூரி முதல்வரிடமும், கல்லூரி நிர்வாகத்திடமும் அனுமதி பெற்று கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. தமிழ்த்துறையின் அனைத்து பேராசிரியர்களுக்கும் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு கருத்தரங்கம் நடத்தப்படும். முதலில் கருத்தரங்க அழைப்பிதழ் அனுப்பி பிற கல்லூரிகளையும் கருத்தரங்கில் பங்கு பெற செய்து ஆசிரியர்களின் பணியை திறம்பட செய்து வருகின்றோம்.

### கல்வி

மாணவர்களுக்கு தமிழ்த்துறை ஆசிரியர்கள் தரமான கல்வியைக் கொடுக்க துறைத்தலைவரால் உறுதிச் செய்யப்பட்டு தரமான தாய்மொழிக் கல்வியை மாணவர்களுக்கு கொடுத்து வருகிறோம். மேலும் மாணவர்களின் உயர் கல்வியை அதிகரிக்கும் பொருட்டும், பணி வாய்ப்புகளை அதிகரிக்கவும் ஆலோசனைகள் வழங்கி, பயிற்சியும் அளித்து வருகின்றோம்.

### மாணவர்களின் முனைவர் பட்ட ஆய்வில் ஆசிரியர்கள் பங்கு

எம் தமிழ்த் துறையில் ஆய்வு மாணவர்களை மேம்படுத்த எம் பேராசிரியர்கள் இரண்டு பேருக்கு முனைவர் பட்ட வழிகாட்டிகளாக இருக்கும் தகுதி கிடைத்துள்ளது. இரண்டு பேராசிரியர்களும் மாணவர்களும் தீவிரமாக வழிநடத்தி வருகின்றனர். குறிப்பாக மாணவர்களின் ஆய்வு தலைப்பை தேர்வு செய்தல், இயல் பிரித்தல் போன்றவற்றில் பெரும் துணைபுரிந்து வருகின்றனர். இது மட்டுமல்லாமல் முதுகலை வகுப்பிலேயே மாணவர்களின் பாடத்திட்டத்தையே ஆய்வு களமாக கொண்டுவர ஊக்கப்படுத்தி தமிழ்த்துறையில் முதுகலையில் படித்து முடித்த மாணவி தொடர்ந்து எம் துறையிலேயே நெறியாளர் ஒருவரின் கீழ் முனைவர் பட்ட ஆய்வினை

மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு எம் தமிழ்த்துறை துறைத் தலைவரின் கீழ் அவரின் ஆலோசனைக்கு ஏற்ப திறம்பட எம்பணிகளை நிறைவேற்றுகின்றன.

## Perspective plan

**தமிழ்த்துறையின் ஐந்தாண்டு திட்டம் (2017 - 2022)**

- ❖ தமிழ்த்துறையைத் தமிழ் உயராய்வு மையமாக கொண்டு வர திட்டமிடப்பட்டிருந்தது.
- ❖ நான்கு மாணவர்களுடன் தொடங்கப்பட்ட முனைவர் பட்ட ஆராய்ச்சியானது ஐந்து ஆண்டுகளில் 32 முனைவர் பட்ட ஆய்வாளர்களை உருவாக்குவதற்கான இலக்கை நிர்ணயித்திருந்தோம்.
- ❖ பல்கலைக் கழக நிதி நல்கையுடன் project பெற்று ஆய்வை மேம்படுத்த திட்டம் வகுத்திருந்தோம்.
- ❖ தமிழ் உயராய்வு மையத்தின் சார்பாக சிறந்த ஆய்வாளர்களை உருவாக்க, ஆய்விதழ் ஒன்றை வெளியிட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
- ❖ இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பன்னாட்டு கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது.
- ❖ வருடம்தோறும் ஒரு தேசிய கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

**நடைமுறைப் படுத்திய திட்டங்கள்**

- ❖ தமிழ்த்துறை நடைமுறைப்படுத்திய ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 2017 – 2018 – ஆம் ஆண்டு தமிழ்த்துறை தமிழ் ஆராய்ச்சி உயராய்வு மையமாக தரம் உயர்த்தப்பட்டது.
- ❖ வருடம் தோறும் தேசிய கருத்தரங்கம் நடத்த வேண்டும் என்னும் முடிவின் பெயரில் 2020 –ஆம் ஆண்டு தமிழ்ப் படைப்பிலக்கிய புனைவு வெளிகள் என்ற ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- ❖ கொரோனா தொற்று காரணமாக 2019 – 2020 ஆகிய இரண்டு ஆண்டுகள் மட்டும் காணொலி வாயிலாக கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

செயல்படுத்த முடியாத திட்டங்கள்

- ❖ 2021 –ஆம் ஆண்டு பல்கலைக் கழக நிதி நல்கையுடன் project பெற்று ஆய்வை மேம்படுத்த விண்ணப்பம் கொடுத்திருந்தோம். ஆனால் அதற்கான எந்த பதிலும் வரவில்லை. அதனால் இத்திட்டம் செயல்படுத்த இயலாமல் போனது. சில திட்டங்கள் கொரோனா தொற்றின் காரணமாக செயல்படுத்த இயலாமல் போனது.

## Appointment and service rules

நியமனம் மற்றும் சேவை விதிகள்

வேலை நேரத்தில் ஆசிரியர்கள் காலை 7.55 மணிக்கு முன் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும். நீங்கள் பணிபுரியும் காலத்தில் நிர்வாகத்தால் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலை, கடமைகளுக்கு மட்டுமே உங்கள் நேரத்தையும் கவனத்தையும் செலுத்துதல். பணியில் சேரும் போது மேலே உள்ள பதவிக்கு தேவையான பட்டம் மற்றும் பிற சான்றிதழ்களை அசலில் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது தான் பணிநியமன ஆணை செல்லுபடியாகும்.

நிர்வாகத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும் சம்பள உயர்வு அல்லது அதிகரிப்பு உங்கள் செயல்திறனுடன் கண்டிப்பாக இணைக்கப்படும். கல்லூரியின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி பணியில் இருக்கும் போது வெளி வேலைக்கு விண்ணப்பிக்க கூடாது.

பேராசிரியர்கள் பணியின் இடைநிற்றல் சூழல் ஏற்படுமாயின் மூன்று மாதத்திற்கு முன்னரே முறையாக கடிதம் கொடுக்க வேண்டும். உடனடியாக வேலையை விட்டு செல்லும் சூழ்நிலை ஏற்பட்டால் மூன்று மாத ஊதியத்தை கல்லூரிக்குச் செலுத்த வேண்டும்.

## Department Policies (துறைக்கொள்கைகள்)

- ❖ ஆசிரியர்கள் பணி நேரத்தில் 5 நிமிடங்களுக்கு முன்பாக துறைக்குள் நுழைய வேண்டும்.
- ❖ துறை ஆசிரியர்கள் காலை செபத்திற்கு முன் வகுப்பறைக்குள் நிற்க வேண்டும்.
- ❖ ஆசிரியர்கள் ஒழுக்கமான முறையில் ஆடைகளை அணிய வேண்டும்.

- ❖ ஆசிரியர்கள் மாணவர்களின் நலனுக்காக முன் முயற்சி எடுக்க வேண்டும்.
- ❖ ஆசிரியர்கள் மாணவர்களை கோட்பாடு மற்றும் நடைமுறையில் அவர்களின் திறனை ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ நமக்கு குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பாடங்களை முடிக்க வேண்டும்.
- ❖ துறை சார்ந்த ஆசிரியர்கள் விடுப்பு எடுக்கும் போது, அவரின் பாட வேளையில், ஓய்வாக இருக்கும் ஆசிரியர்கள் சென்று பாடம் நடத்தி வருகின்றனர்.

## Welfare measures for teaching staff

தமிழ்த்துறை எங்கள் சக ஊழியர்களின் வீட்டுச் செயல்பாடுகளில் ஒன்றாக கலந்து கொள்ளும் கொள்கையைக் கொண்டுள்ளது. மாணவர்களின் பிறந்த நாள் மற்றும் சாதனைகளுக்கு எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றோம். எம் துறை மாணவியர்களிடமும், பேராசிரியர்களிடமும் அவர்களின் வசதிக்கேற்ப உதவித்தொகை வசூலிக்கப்பட்டு ஏழை மாணவர் நிதிக்காக எம்துறை சார்பாக வழங்கப்பட்டு வருகிறது. எம்துறை ஆசிரியர்களின் பிறந்த நாள் விழாவை துறையில் இனிப்புகளுடன் கொண்டாடி, புதிய ஆடையைப் பரிசாகக் கொடுத்து கொண்டாடி வருகின்றோம்.

மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் இல்ல விழாக்களில் கலந்து கொண்டு பரிசளித்து மகிழ்கின்றோம்.

## Performance Appraisal system

**கண்காணிப்பு மற்றும் ஆசிரியரின் செயல்பாடு**

தமிழ்த்துறையில் செயல்திறன் மதிப்பீடு மற்றும் ஆசிரியர் மதிப்பீடு படிவங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. வகுப்பு ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்து கருத்துப் படிவங்களை சேகரித்து எங்கள் துறைத் தலைவரிடம் சமர்ப்பிக்கிறார்கள். கற்றல் - கற்பித்தலில் செயல்முறையின் மேம்பாட்டிற்காக இவ்வாறு கவனிக்கப்படும் கருத்து நியாயமான முறையில் கவனிக்கப்படுகிறது.

## Internal and External financial audits

### கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை நிதி

தமிழ்த்துறையின் சார்பாக நடத்தப்படும் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் விழாக் கொண்டாட்டங்களின் நாட்களில் எங்களின் இந்த நிதி மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் மற்றும் அனைத்து ஏற்பாடுகளுக்கும் செலவழிக்கப்பட்டது. துறை சார்பாக வரும் செலவுகளுக்கு ஆசிரியர்கள் அனைவரும் மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்து சேமிப்பாக வைத்து துறைசார்ந்த செலவுகளுக்கு அத்தொகையை பயன்படுத்தி வருகிறோம். 2017 – 2018 கல்வி ஆண்டு முதல் 50 ரூபாயாக இருந்த ஆசிரியர் சேமிப்பு தொகை 2020 – 2021 கல்வியாண்டு முதல் 100 ரூபாயாக வசூலித்து சேமிக்கப்படுகிறது. மாதந்தோறும் 100 ரூபாய் வழங்கி துறை சார்பில் நிதியை உருவாக்கி துறை சார்ந்த தேவைகளுக்கு அதை பயன்படுத்துகின்றோம். இக்கணக்குகள் துறைத்தலைவரால் தணிக்கைச் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## Mobilization of funds

துறை சார்பாக நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் அழைக்கப்பட்ட பேச்சாளர்களை நடத்துவதற்கு ஒரு தொகை வழங்கப்படுகிறது. நிர்வாகம் நிதியில் நிகழ்வுகள் நடத்தி முடித்த பிறகு அவற்றை துறை சார்ந்த இதர செலவுகளுக்கு பயன்படுத்தி வருகிறோம்.

## Quality Assurance Cell (IQAC)

தமிழ்த்துறையின் சார்பில் நடத்தப்படும் IQAC கூட்டமானது ஒவ்வொரு கலைத்திட்ட பிரிவிற்கும் தனித்தனியே கூட்டம் நடத்தி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த தகுந்த ஆலோசனைகளையும், உதவிகளையும் செய்கின்றது. IQAC –யின் வழிகாட்டுதலின் படியே ஒவ்வொரு கலைத்திட்ட பிரிவும் தங்கள் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றன.

Criteria வாயிலாக கூட்டங்கள் நடத்தப்பட்டு அக்கூட்டத்தில் Criteria IQAC ஒருங்கிணைப்பாளரும், பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் கலந்து கொள்வர். IQAC - கூட்டத்தில் UGC கட்டுரைகள் எழுத அறிவுறுத்தப்பட்டன. கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் (NAAC) பணிகளைக் குறிப்பிட்ட காலங்களில் செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டன. மேலும் work diary, mark Register, Attendance Register முதலிய ஆவணங்களை பராமரிக்கவும், நடைமுறைப்படுத்தவும் அறிவுறுத்தினர். அவர்களின் அறிவுறுத்துதலின் பெயரில் கருத்துக்களை தெரிந்து, வடிவமைத்து மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து அதன் பின் அதில் மாற்றங்கள் இருப்பின் அத்தரவுகளைச் சீராக்கி முழுமைப்படுத்தும் பணியை மிகச் சிறப்பாக செய்து வருகின்றோம்.

**IQAC மூலம் அங்கீகாரத்திற்கு முந்தைய ஐந்தாண்டுகளில் மேம்படுத்தப்பட்ட மேம்பாடுகள்**

IQAC கூட்ட தமிழ்த்துறையின் சார்பாக கருத்தரங்குள் பயிலரங்கம், மாநாடுகளை வழக்கமான இடைவெளியில் அல்லது அடிக்கடி நடத்த IQAC அறிவுறுத்தியது அவர்களின் அறிவுறுத்துதலின் பெயரில் வருடம் தோறும் கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் நடத்தி வருகின்றோம். மேலும் மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் பண்பாட்டு கூறுகளை மாணவர்களுக்கு செய்முறை பயிற்சியாக கொடுக்க IQAC அறிவுறுத்தியது. அதன் பேரில் குறிப்பிட்ட இரண்டு ஆண்டுகளாக மாணவர்களுக்கு பண்பாட்டு கூறுகளை செய்முறை பயிற்சியாக கொடுத்து கலை பொருட்களாக உருவாக்கி அதைத் தமிழ்த் துறையில் பாதுகாத்து வருகின்றோம்.

IQAC –யின் வழிகாட்டுதலின் பெயரில் புத்தக மதிப்புரை செய்ய அறிவுறுத்தினர். அதன் படி பாடத்திட்ட வழிகாட்டுதலின்படி துறையின் சார்பாக புத்தக மதிப்புரை, புத்தக விமர்சனம் போன்றவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் திறம்பட செய்து வருகின்றனர்.

IQAC – மாணவர்களின் படைப்புகளை புத்தகமாக வெளியிட அறிவுறுத்தியது. அதன்படி ஆய்வரங்க மாணவர்களுக்கு பயிலரங்கம் நடத்தி, பயிற்சி அளித்து புத்தகமாக வெளியிட்டு வருகின்றோம்.

இவ்வாறு IQAC அறிவுறுத்திய பல ஐந்தாண்டு திட்டங்களை தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும் திறம்பட செய்து வருகின்றோம்.

# CRITERIA VII

## Department Values and Best Practices

### Gender Equity

தமிழ்த்துறை மற்றும் பொதுத்தமிழ் மாணவர்களுக்கு பாலின சமத்துவம் மற்றும் சக மாணவர்களை மதித்து நடப்பதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்படுகிறது. பாலின வேறுபாடுகள் கடையப்பட்டு தமிழ்த்துறை, பிற கல்லூரிகள் மற்றும் அமைப்புகள் நடத்தும் போட்டிகளில் பங்குபெற்று மாணவ மாணவியர் தம் திறமையை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களும் அறிவுசார் போட்டிகளிலும், விழிப்புணர்வு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு பயன்பெற்று வருவதோடு தம் திறமைகளை வெளிக்காட்டி பரிசுகளும் பெற்று வருகின்றனர்.

கருத்தரங்குகள், பயிலரங்குகள், தமிழ் இலக்கியமன்ற விழாக்களில் மாணவ – மாணவியர் உற்சாகமாகக் கலந்து கொண்டு மொழியறிவைப் பெறுவதோடு தம் கலைத் திறமைகளையும் ஆண் - பெண் பாலின பாகுபாடின்றி செயல்பட வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. எனவே பாலின சமத்துவம் மேம்படுகிறது.

### போட்டிகள்

தமிழ்த்துறை மற்றும் பொதுத்தமிழ் மாணவ – மாணவியர் பல்வேறு விதமான போட்டிகளில் கலந்து கொள்ள பேராசிரியர்கள் அவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். இதன்மூலம் மாணவர்கள் சிந்தனைத் திறனை பெருக்கிக் கொள்வதோடு பொது அறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்கிறார்கள்.

| வ. எண் | தலைப்பு | நாள் | கலந்து கொண்டோர் | |
|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் |
| 1. | ‘GLOBAL IAS ACADEMY’ – மாநில அளவிலான அறிவுசார் போட்டிகள் 2019 | 20.07.2019 | 3 | 40 |
| 2. | St. Alphonsa Academy for Excellent | 13.07.2019 | 2 | 2 |
| 3. | குமரி இளையோர் கலை இலக்கியப் பேரவை கலைப் போட்டி | 02.08.2019 | 1 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை தமிழ் வளர்ச்சித் துறைசார் போட்டி | 09.082019 | 3 | - |
| 5. | தமிழ்த்துறைசார் வினாடி வினா போட்டி | 04.09.2019 | 9 | 3 |

GLOBAL IAS ACADEMY – மாநில அளவிலான அறிவுசார் போட்டியில் ஆங்கில கையெழுத்துப் போட்டியில் 18 பேரும் தமிழ் கையெழுத்துப் போட்டியில் 9 பேரும் தமிழ் கட்டுரைப் போட்டியில் 10 பேரும் ஓவிய போட்டியில் 6 பேரும் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றனர்.

St. Alphonsa Academy for Excellence நடத்திய பாடல் போட்டியில் ஒரு மாணவியும், வினாடி – வினா போட்டியில் 2 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

குமரி இளையோர் கலை இலக்கிய பேரவை நடத்திய கட்டுரைப் போட்டியில் ஒரு மாணவி கலந்து கொண்டு மூன்றாம் பரிசு பெற்றார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டியில் தலா ஒரு மாணவி கலந்து கொண்டாள்.

தமிழ்த்துறைசார் வினாடி-வினா போட்டியில் 12 மாணவ மாணவியர் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். கட்டுரைப் போட்டியில் ஒரு மாணவி முதல் பரிசைப் பெற்றார்.

தமிழ்த்துறை பேராசிரியர்கள் ஊக்கப்படுத்தியதன் விளைவாக மாணவ மாணவியர்கள் கட்டுரை எழுதுதல், பேச்சுக்கலை, கவிதை எழுதுதல் முதலானவற்றில் தேர்ந்த பயிற்சி பெற்றுள்ளார்.

### கருத்தரங்கம் / பயிலரங்கம்

கவிதை, நாடகம், நாவல் போன்ற தமிழ் இலக்கியங்களில் அடிப்படையில் நடத்தப்படும் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளில் மாணவர்கள் கலந்து கொண்டு தம் படைப்பாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்து வருகின்றனர்.

| வ. எண் | பொருண்மை | நாள் | கலந்து கொண்டோர் | |
|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் |
| 1. | காலந்தோறும் திரையிசைக் கவிஞர்கள் (தே.க) | 12.08.2017 | 28 | 180 |
| 2. | கவிதைக்கலை பயிலரங்கம் | 22.09.2017 | 42 | 152 |
| 3. | நாடகப் பயிலரங்கம் - விவிலிய நாடகம் (எஸ்தர்) | 21.02.2019 | 76 | 194 |
| 4. | சமகால நாவல்களில் புனைவு வெளிகள் (பயிலரங்கம்) | 30.01.2020 | 14 | 92 |
| 5. | தமிழ் படைப்பிலக்கிய புனைவு வெளிகள் (தே.க) | 15.02.2020 | 22 | 176 |
| 6. | இளவேனில் கவிதை பயிலரங்கம் | 21.04.2022 | 3 | 47 |

நாஞ்சில் கத்தோலிக்க கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை நடத்திய மேற்குறிப்பிட்ட கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளில் மாணவ – மாணவியர் கலந்து கொண்டு இலக்கிய அறிவை பெற்று மகிழ்கின்றனர். மேலும் பிற கல்லூரிகள் சார்பாக நடைபெறும் கருத்தரங்குகளிலும் எம் துறைசார் மாணவியர் கலந்து கொள்கின்றனர். அவ்வகையில் 11.04.2022 அன்று ‘நவீன அணுகுமுறையில் தமிழிலக்கியம்’ என்னும் தலைப்பில் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கல்லூரி தமிழாய்வு மையமும், காலசகம் பதிப்பகமும் இணைந்து நடத்திய தேசிய கருத்தரங்கம் எம் துறை மாணவியர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### தமிழ் இலக்கிய மன்றம்

தமிழ் இலக்கிய மன்றங்களில் மாணவ – மாணவிகளின் பாலின வேறுபாடின்றி தலைமை பொறுப்பில் அமர்த்தப்படுகின்றனர். தங்களது ஆடல், பாடல், நடிப்பு மற்றும் பேச்சாற்றலை மேடை பயமின்றி வெளிக்காட்டுகின்றனர். எனவே வெளியிடங்களுக்குச் சென்று போட்டிகளில் கலந்து கொள்ளவும், இலக்கிய கலை ஆர்வத்தைப்பெற்று

படைப்பாளர்களாக உருவாகும் சிறந்த களமாகவும் தமிழ் இலக்கிய மன்றங்கள் திகழ்கின்றன.

## Waste Management

தமிழ்த்துறை சார்ந்த மட்கும் குப்பைகளாகிய காகிதம், கழிவுகள் மற்றும் உணவுக் கழிவுகள் அதற்கான குப்பைத் தொட்டிகளில் கொட்டி வைக்கப்படுகின்றன. அதனை கல்லூரியின் துப்புரவுப் பணியாளர்கள் அந்தந்த நாட்களிலேயே அவற்றை அகற்றி சுத்தப்படுத்தி வருகின்றனர். பிளாஸ்டிக் கழிவுகள் அதற்கான குப்பைத் தொட்டிகளில் கொட்டப்பட்டு முறையாக அகற்றப்பட்டு வருகின்றன. தமிழ்த்துறை சார்ந்த திரவக் கழிவுகள் கழிவுநீர் குழாய் வழியாக வெளியேற்றப்படுகின்றது. கழிவறைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் ஒவ்வொரு ஆசிரியர்களும் பயன்படுத்துவதோடு தண்ணீரை சிக்கனமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

## Harmony towards cultural regional linguistic

| S. No. | Year | Number of Students | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Hindus | | Muslim | | Christians | | Total |
| | | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | |
| 1. | 2017 – 18 | 49 | 83 | 13 | 16 | 133 | 302 | 595 |
| 2. | 2018 – 19 | 51 | 77 | 3 | 23 | 123 | 281 | 558 |
| 3. | 2019 - 20 | 67 | 63 | 3 | 21 | 128 | 229 | 511 |
| 4. | 2020 – 21 | 47 | 69 | 10 | 11 | 104 | 200 | 441 |
| 5. | 2021 – 22 | 48 | 40 | 5 | 4 | 123 | 177 | 397 |

நாஞ்சில் கத்தோலிக்க கலை அறிவியல் கல்லூரி இருபாலர் இணைந்து பயிலும் கல்லூரி என்பதால் ஆண் - பெண் என்ற பாகுபாடு களையப்பட்டு பாலின ஒற்றுமையுணர்வு வலியுறுத்தப்படுகிறது.

**கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமியர்** என மும்மதத்தைச் சார்ந்த மாணவ மாணவியர் பெருவாரியாக கலந்து படிக்கும் எம் துறையில் பொங்கல், கிறிஸ்துமஸ், ஓணம் போன்ற பிராந்திய விழாக்கள் எவ்வித பாகுபாடுமின்றி கொண்டாடப்படுவதால்

மாணவர்களிடையே சாதி, மத, இன பேதமற்ற நல்லிணக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தங்கள் குடும்ப விழாக்களிலும், மத விழாக்களிலும் மாணவ மாணவியர் தம் சக வகுப்பினரை பாலின வேறுபாடின்றி அழைத்து அன்பும் நட்பும் பாராட்டுகின்றனர்.

**கிறிஸ்துமஸ், தீபாவளி, ரம்சான்** போன்ற மத அடிப்படையிலான விழாக்களின் போது தம்முடன் பயிலும் மாணவ மாணவியரை அழைத்து விருந்திலும் மகிழ்விலும் பங்கெடுக்கச் செய்வதால் இவ்விழாக்கள் அர்த்தமுள்ளவைகளாக மாறுகின்றன. மேலும் இவ்விழாக்களின் மகிழ்வை வெளிப்படுத்தும் விதமாக சக மாணவ – மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசுகள் மற்றும் உணவு பதார்த்தங்கள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

**தமிழக – கேரள** எல்கையில் எம் கல்லூரி அமைந்திருப்பதால் மொழி அடிப்படையிலும் நல்ல புரிந்துணர்வும், மொழிவாரியாக எவ்வித பாகுபாடற்ற நிலையும் காணப்படுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டுணர்வால் கடந்த ஐந்து ஆண்டுகளில் மாணவ – மாணவியரிடையே இன, மொழி, மதத்தின் அடிப்படையில் எவ்வித பிரச்சனைகளும், பிணக்குகளுமின்றி நட்பும், அன்பும், தோழமையுணர்வும் ஒவ்வொரு நாளும் வளர்ந்து வருகிறது. சாதி, மத, இன பேதமின்றி செயல்பட ஊக்குவிக்கப்படும் மாணவ – மாணவியர்கள் மதசார்பின்மைக்கும், ஒருமைப்பாட்டுணர்விற்கும் உதாரணமாக திகழ்கின்றனர்.

## Constitutional obligations values, rights and duties

இந்திய அரசியலமைப்பு சட்டத்திட்டங்கள் மற்றும் இந்திய குடிமக்களின் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு உருவாக்கம் விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்திய குடிமக்களின் **அடிப்படை உரிமைகள்** மற்றும் குடியுரிமை சட்டத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வை எம் கல்லூரியின் (MSW) சமூகப் பணிகள் துறையினர் நடத்தினர். இந்நிகழ்வின் வாயிலாக மாணவ மாணவியர் நீதித் துறைசார்ந்த விளக்கங்களையும் அடிப்படை குடியுரிமை தொடர்பான சந்தேகங்களையும் தெளிவாக அறிந்து கொண்டனர்.

## International commemorative days, events and festivals

### தேசிய விழாக்கள்

தமிழ்த்துறை மற்றும் பொதுத்தமிழ் மாணவர்கள் கல்லூரி மற்றும் தமிழ்த்துறை சார்பாக நடத்தப்படும் தேசிய விழாக்களில் கலந்து கொண்டு பயனடைகின்றனர். இந்திய சுதந்திரதின விழா, குடியரசுதின விழா போன்ற தேசிய விழாக்களில் கலந்து கொள்ளும் மாணவ – மாணவியர் தாய்த்திருநாட்டின் பெருமைகளை தெரிந்து கொள்கின்றனர்.

### மாநில விழாக்கள்

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா, கேரள மாநில பாரம்பரிய விழாவாகிய ஓணவிழா போன்ற விழாக்கள் கொண்டாடப்படுவதால் மாணவ – மாணவியரிடையே மொழிகள் பற்றிய புரிந்துணர்வும், ஒவ்வொரு மாநிலத்தின் சிறப்புத் தன்மையும் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

### மாநில கவிஞர் தம் பிறந்தநாள் விழாக்கள்

பாரதியார், பாரதிதாசன் போன்ற தமிழ்க்கவிஞர்களது பிறந்தநாள் விழாக்களை சிறப்பிக்கும் விதமாக நடைபெறும் கருத்தரங்குகளில் மாணவ மாணவியர் கலந்து கொண்டு அவர்தம் நாட்டுப்பற்றையும், எழுத்தாற்றலையும் தெரிந்து கொள்வதோடு தங்களுடைய திறமைகளையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

பாரதியார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் விதமாக ‘வல்லமை தாராயோ’ என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் 21 மாணவ — மாணவியர் கலந்து கொண்டு இருவர் பரிசுகள் பெற்றனர். ‘செந்தமிழ் நாடெனும் போதினிலே’ என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் 7 மாணவியர் கலந்து கொண்டு இருவர் பரிசுகள் பெற்றனர். ‘என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்’ என்ற தலைப்பிலான பேச்சுப் போட்டியில் 9 பேர் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். பாரதிதாசன் பிறந்த நாள் விழாவை சிறப்பிக்கும் விதமாக இணையவழி கருத்தரங்கம் நடைபெற்றது.

தியாகிகள் விழா

நாட்டுக்காக உயிர்நீத்த விடுதலைப் போராட்ட தியாகி பகத்சிங்கின் பிறந்த நாளை சிறப்பிக்கும் விதமாக தமிழ்த்துறை சார்பாக நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளாகிய சுதந்திர உணர்வூட்டல் பாடல் போட்டியில் 7 பேர் கலந்து கொண்டு இருவர் பரிசுகள் பெற்றனர். நீதி காத்த மாவீரன் பகத்சிங் என்ற தலைப்பிலான பேச்சுப் போட்டியில் 11 பேர் கலந்து கொண்டு இருவர் பரிசு பெற்றனர்.

## Best Practices

மாணவ–மாணவியரிடையே நற்பண்புகளை வளர்க்கும் விதமாகவும், ஊக்குவிக்கும் விதமாகவும் தமிழ்த்துறை சார்பாக பல நல்ல செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

- ❖ நாஞ்சில் கல்லூரி சார்பாகவும், தமிழ்த்துறை சார்பாகவும், பிற கல்லூரிகள் சார்பாகவும் நடத்தப்படும் போட்டிகளில் மாணவ – மாணவியரை கலந்து கொள்ளச் செய்து பரிசுகள் பெறச் செய்தல்.
- ❖ பயிலரங்குகள் நடத்தப்பட்டு கவிதை, கதை, கட்டுரை எழுத ஊக்குவித்து திறமையை வெளிக்காட்டச் செய்தல்.
- ❖ புத்தக மதிப்புரை மற்றும் விமர்சனம் வாயிலாக வாசிப்புத் திறனையும், இலக்கிய விமர்சன ஆற்றலையும் வளர்த்தல்
- ❖ மாணவர் தம் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் விதமாக கையெழுத்துப் பிரதி வெளியிடுதல்
- ❖ மாணவ – மாணவியர் தம் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக மரபுசார் கலைப் பொருட்களைப் பாடம் தொடர்பாக உருவாக்க வழிகாட்டி திறம்பட செயல்படச் செய்தல்
- ❖ பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவியருக்கு துறை சார்பாகவும், ஆசிரியர்களின் தனிப்பட்ட உதவியாலும் கல்விக்கட்டணம் செலுத்துதல்

**கல்லூரியின் தனித்தன்மை**

- ❖ கல்லூரியின் அனைத்து வகுப்பறைகளிலும் 'ஒளிப்படக்காட்டி கருவி' (Projector) வசதி செய்யப்பட்டுள்ளது.
- ❖ அதிகப்படியான (FDP) ஆசிரியர் மேம்பாட்டுத்திறன் பயிற்சியளித்தல்.
- ❖ மின் நூலகத்தை (E-Library) ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்த முழுச்சுதந்திரம் அளிக்கப்படுவதால் ஆய்வு மற்றும் கட்டுரை எழுதும் திறன் மேம்படல்.
- ❖ ஆசிரியர் தின விழாவிற்கு பேராசிரியர்கள் அனைவருக்கும் பரிசளித்தல்
- ❖ கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு இனிப்பு மற்றும் மதிப்பூக்கத் தொகை வழங்குதல்
- ❖ ஒவ்வொரு கல்லூரி ஆண்டுவிழாவின் போதும் அனைத்து பேராசிரியர்களுக்கும் புத்தாடை வழங்கி சிறப்பித்தல்.

இத்தகைய நற்பண்புகளால் நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி பிற கல்லூரிகளிலிருந்து தனித்தன்மையுடன் சிறப்புற்று விளங்குகிறது.




தமிழ்த்துறை ஒருங்கிணைக்கும்
மொழி ஆய்வரங்கும் நூல்வெளியீடும்






Kaliyakkavilai, Tamil Nadu, India
85P9+WV9, Kaliyakkavilai, Tamil Nadu 695502, India
Lat 8.338417°
Long 77.17078°

